



திருக்கோயில்
அக்டோபர் '90 விலை: ரூ. 3



முகப்பு:

நவராத்திரி கொலு

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D

மாலை : 32 | திருவள்ளுவர் ஆண்டு 2021 பிரமோதூத ஆண்டு ஐப்பசி அக்டோபர் 1990 விலை ரூ. 3-00 | மணி 10

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

**திருக்கோயில் வாசகர்களுக்கு**
**மனம் நிறைந்த**
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

## பொருளடக்கம்

கண்ணுடையர் என்போர் கற்றோர்
—மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்

ஞானப்பழமான பழநி தண்டாயுதபாணி
—பாரதி தீர்த்ததாசன்

சைவம் வளர்த்த மகளிர்
—டாக்டர் சிவ. பார்வதி

தொண்டை நன்னாட்டு வைணவத் திருத்தலங்கள்
—நித்திலக்கோ

சித்திரபாரதம்
—செவ்வேள்

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருககிருபானந்தவாரியார்

ஆடல் காணீரோ, திருவிளையாடல் காணீரோ!
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

ஆதியும் அந்தமும் இல்லாதபராபரம்
—திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

கலைமகள், அலைமகள், மலைமகள் துதி
—சேக்கிழார்தாசன்

சிவாலய தரிசனம்


கம்பரின் இராமாவதாரம்.
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

## இரண்டாம் அட்டைப்பட விளக்கம்

நம் அறநிலையத்துறை வளாகத்தில் புதியதாக அருள்மிகு விஜய விநாயகர் ஆலயம் தோற்றுவிக்கப்பட்டு திருக்குட நீராட்டு விழா 3.9.90 அன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது. தவத்திரு மயிலை குருஜி சுந்தரசுவாமிகள், தவத்திரு சுவாமி ராமதாசர், திருமிகு சாம்பமூர்த்திசிவாச்சாரியார் ஆகியோர் கலந்துகொண்டனர். ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்., இணை ஆணையாளர் திரு என். எஸ். இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்., ஆகியோர் உடன்உள்ளனர்.

# கண்ணுடையர் என்போர் கற்றோர்

## தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்



உரலுக்குள் நெல்மணிகள் உலக்கைபட்டு
உமிவேறு அரிசிவேறாய்ப் பிரிவது போல்
உறவுதனை விரும்பாமல் உறுமுகின்ற
எதிரிகளின்
உடல்வேறு தலைவேறாய் ஆக்குகின்ற
வீரனவன்!

கூரிய வேல்முனையால் வைத்த குறி தவறாமல்
கொடும் பகைவர் குடல்கிழித்துத் தோரணம்
கட்டுகின்ற
வீரியம் மிகக் கொண்ட வேந்தர்
பெருந்தகையாம்
ஆரியப் படைகடந்த நெடுஞ்செழிய
பாண்டியனவன்.


செந்தமிழைச் சிந்தையிலே குடிவைத்த
காரணத்தால்
சீரிய நற்புலமை பெற்ற செழியர்குல
வேந்தனவன்

ஆராயாது தீர்ப்பளித்த அவசரத்தால்
கண்ணகிஅவனைத்
'தேரா மன்னா' எனத் தூற்றியதாய்க்
கதையும் உண்டு!
நீதி இறந்ததென உணர்ந்தவுடன், தன்னுயிரை
அந்த
நீதிக்கே வழங்கி அதனை நடமாட
விட்டானென்று
இந்த நெடுஞ்செழிய பாண்டியனைத்தான்—
சேர
இளங்கோவின் சிலம்பு புகழுமெனச்செப்பிடுவர்.

இம்மன்னன் வாழ்ந்தபோது பாண்டியநாட்டில்
இயற்கைவளம் நிறைவாகக் கொழித்ததங்கே!
செழிப்பு மேலும் நிலையாகக் குலுங்குதற்கு
ஏற்றவாறு
செயல்முறைகள், திட்டங்கள் இயற்றி
ஆண்டான்.

தென்பாண்டிக் கடல்முத்தும் தேனருவி
மலையழகும்,
பொன்மாடக் கூடங்களும், பொலிவு தவழ்
சோலைகளும்,
வளைந்தோடும் ஆற்றோரம் அமைந்துள்ள
கழனிகளில்
வளைந்து சாய்ந்து காற்றில் சதிராடும்
கதிர்களுமே
நெடுஞ்செழியன் உளத்துக்கு முழுநிறைவைத்
தரவில்லை!
நீள்வையம் பெறுகின்ற வளத்திலெலாம்
சிறந்தவளம்
நிற்காமல் ஊற்றெடுக்கும் கல்வி வளம்
ஒன்றேதான் எனக் கண்டு
கற்காதோர் வாழும் நாட்டில் பிற
வளமெல்லாம் பாழே என்றான்!

பாசி படராமல் இதயத்தைப் பளிங்காக்கும்
கல்வியினை



ஆசிரியப் பெருமக்கள் ஊட்டுகின்றார்;
அதனாலே
உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்-
அக்
கற்றறிவாளரைக் காத்திடல் வேண்டுமெனத்
தொடங்குகின்ற புறப்பாடல் ஒன்றைத்
தமிழன்னை-கழுத்தில்
தொங்கவிட்டழகு பார்க்க மாலையாகத்
தொடுத்திட்டான்!
தோகையாம் கோப்பெருந்தேவியவள் அவன்
தோள் தழுவிக் கொஞ்சி சில கேள்விகளைக்
கேட்டறிந்தாள்!
''உற்றுழி உதவுதல் எனில் என்னவாம்
மன்னவா?'' இது முதல் கேள்வி!

''ஊறுபாடு ஒன்று ஆசிரியர்க்கு நேருமெனில்
உடன் சென்று துணை நிற்க வேண்டு''
மென்றான் நெடுஞ்செழியன்!
''உறுபொருள் கொடுத்தல் எனில் யாது
பொருளோ?'' எனக் கேட்டாள்!
''ஊதியம் ஆசிரியர்க்கு மிகுதியாய் அளித்திட
வேண்டும்'' என்றான் அந்தநெடுஞ்செழியன்.
''உற்றுழி உதவி, உறுபொருள் கொடுப்பதுடன்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!''
என்றான்.
''அதற்கென்ன பொருள்'' என்று அரசியார்
பொருள்
அறிந்திருந்தும் அவன் வாயால் கேட்க
ஆவலுற்றாள்!

''வண்ணமயிலே! பிற்றை நிலை எனில்
பிற்பட்ட நிலையென்றுப்
வழிபாட்டு நிலையென்றும் பொருட்கள்
உண்டெனினும்
பெருந்துயரமெனும் பிற்பட்ட நிலை
எய்திட்டபோதுகூட
திருமுகம் சிறிதும் சுளிக்காமல் கற்றல்
நன்றென்பதாலேதான்
இனிதான அறிவுகளைப் பெற விழைவோர்
முனியாது கற்க வேண்டுமென எழுதியுள்ளேன்''
என்றான்.

புன்னகையை நெளியவிட்டு அவன் முகத்தில்
முகம்புதைத்து
மின்னொளிக் கன்னமிரண்டும் சிவப்பேறப்
பூரித்துப் போய்
''இன்னுமொரு ஐயப்பாடு மன்னவனே!
அன்னையொருத்திக்குப் பிறந்த பிள்ளைகளில்,
கல்வி கற்ற பிள்ளை-கல்லாப் பிள்ளை
இவையிரண்டும் அவளுக்கு
கண்கள் இரண்டைப்போல்தானே?'' எனக்
கேட்டாள்!

'பிறந்தார்கள் இருவர், ஒரு தாய் வயிற்றில்
என்றாலும்
சிறந்தோனாய்த்தாய் எண்ணிச் சிந்தை
குளிர்வதெல்லாம
அறம், திறம் உணர்த்துகின்ற கல்வி
நீரோடையிலே

அன்றலர்ந்த மலராக இருக்கின்ற அறிவார்ந்த
மகனைத்தான்!'
என்று கூறிக்கொண்டே மன்னன் எழிலரசிமேல்
சாய்ந்து
எண்ணத்தை ஓடவிட்டு மேலும் எழுதினான்
ஓலையிலே!

''தாய்க்கு மட்டுமல்ல இந்த நிலை
தரணியாளும் அரசுக்கும் பொருந்தும்!
முன்வரிசைக்கு மதிப்பளிக்க வேண்டி,
மூடனாயிருந்தாலும் பரவாயில்லையென்று
வீட்டுக்கு மூத்தோனை அழைத்து அறிவுரைகள்
கேளாமல்,
நாட்டுக்கு நலம் பயக்கும் செயல்கள் குறித்து-
இளையவனாய் இருப்பினும், கல்வி கேள்வியில்
யார்க்கும்
இளையாதவனாய்த் திகழ்பவனையே அரசும்
அழைத்துப் பேசும்!
நாலுவகை மனிதர்களும் வாழுகின்ற நமது
நாட்டில்
மேல்நிலை வாழ்வோரெல்லாம் மேலோர்
அல்லர் - அன்றிக்
கீழ்நிலை வாழ்வோர் கீழோருமல்லர்!-ஒரு
சூழ்நிலையாலே வந்தது இந்தத் தீவினை
யெனினும்,
கீழிருப்போன் கல்வி கேள்வியிற்
சிறந்தோனாயின்
மேலிருப்போன், அவன்கீழ் இருப்பவனே
ஆவான்!''
இதை எழுதி அரசியிடம் படித்தான் மன்னன்.
அவளோ;
இதழ்பொருத்தி அவன் இதழை ஈரமாக்கி
''எழுதுகோல் பிடித்த விரல் எங்கே?'' என்று
இழுத்து வைத்துக் கண்களிலே ஒத்திக்
கொண்டாள்.
அகத்துறையின் சுகத் தென்றல் மணம் நுகர்ந்து
ஆடினான் மன்னனவன்!

புறத்துறைக்குப் புதையல் போல கல்வியின்
பெருமைதனைப்
பாடினான் அந்தத் தென்னவன்!


''உற்றுழி உதவியும், உறுபொருள்கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
'மூத்தோன் வருக' என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே''

(புறநானூறு: பாடல் : 183
பாடியவர்: ஆரியப்படை கடந்த
நெடுஞ்செழியப்பாண்டியன்)

பொருள் விளக்கம்:

உற்றுழி-துன்பம் நேர்ந்தபோது.
உறுபொருள்-மிகுதியான பொருள்
பிற்றைநிலை-பிற்பட்ட நிலை அல்லது
வழிபாட்டு நிலை.
முனியாது-வெறுப்புக் கொள்ளாமல்.
திரியும்—வேறுபடும்
அவன்கட்படுமே-அவனுக்கு அடங்கியிருக்க
நேரிடும்.

**—மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ்
அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின்
'' சங்கத் தமிழ் '' பேழையிலிருந்து இக்
கவிதை ஆரம் நன்றியுடன் எடுத்து
வெளியிடப்படுகிறது.**



## குறளோவியம் வாழ்க!

**கலைஞரின் குறளோவியக் காவியம்**

**கவினுறு தெய்வாம்ச தேவாமிர்தம்**

**மாண்புமிகு தமிழக முதல்வராம் டாக்டர்**

**கலைஞர் அவர்களின் குறளோவியக் காவியக்
கட்டுரை**

**அருளோவியக் களஞ்சியத் தேனூற்றே.**

—சீவனருட்செல்வன்
**அரசு கலைக் கல்லூரி,
திருவண்ணாமலை.**




## பாரதி தீர்த்ததாசன்

''படிக்கின்றிலை பழனித் திருநாமம்'' என்கிறார் கந்தரலங்காரத்திலே அருணகிரி நாதர். ''பழனி'' என்ற நாமத்தைக் கூறினாலே நன்மையுண்டாகும் என்பது குறிப்பு. ''பழனி'' எனப் பெயர் வந்ததற்கே ஒரு வரலாறு உண்டு.

நாரதர் அருமையான மாங்கனி (மாதுளங் கனி என்றும் சிலர் கூறுவர்) ஒன்றைச் சிவபெருமானிடம் அளித்தனர். ''உலகம் பூராவும் சுற்றிவிட்டு எவர் வருகிறாரோ அவருக்கு இந்த மாங்கனியை அளிப்பேன்'' எனச் சிவபெருமான் கூற, முருகப் பெருமான தனது மயில் வாகனத்திலேறி உலகை வலம் வரப் புறப்பட்டார். விநாயகப் பெருமானோ அம்மையப்பர்களான பார்வதி பரமேச்சுரர்களை ஒரு முறை வலம் வந்து, ''படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல் அருளல், ஆகிய ஐந்து தொழில்களைச் செய்யும் உங்களிருவரையும் வணங்குவதும், உலகைச் சுற்றிவருவதும் ஒன்றே'' என்றார். சிவபெருமான் மகிழ்ந்து அம்மாங்கனியை விநாயகப் பெருமானுக்களித்துவிட்டனர். உலகைச் சுற்றிவந்த முருகன் நிகழ்ந்தன தயறிந்து தனக்கு அக்கனி கிட்டவில்லை என்ற வேதனையில் பூவுலகிற்கு வந்தார். தேடிவந்த பார்வதி பரமேச்சுரர்கள் முருகனைக கண்டு மகிழ்ந்து ''நீயே சிவப்பழம்! உனக்குத்தனியாக பழம் வேண்டுமா? பழம் நீயே! என்று கூறி முருகனை உச்சி மோந்து முத்தமிட்டனர். அத்தகைய இடமே பழனி என்று பெயர் பெற்றது. அவ்வழகிய செயதியை

கரடமந் துடைய கணபதியும்
கருணா நிதிநீ இருவருமாய்க்
கயிலை கிரிமேல் விளையாடக்
கௌரியுடன் வாழ் கண்ணுதல்கண்டு

இரத மிகுந்த மாங்கனி யொன்று
ஏழுகடற்கும் எண்கலைக்கும்
இலங்கு நவகண்டங்கட்கும்
எழிலாம் சக்ரவாளத்தை

ஒருகை நொடிக்குள் வலம் வந்தோர்க்கு
உகந்தே தருவோம் எனமூத்தோன்
உமைநாயகனை வலம்வரநீ
ஒருகைந்நொடிக்குள் செகதண்டம்

பரமன் மகிழ வலம் வந்த
பாதா! தாலோ தாலோலோ!
பழனிப்பதியாய் குமரகுரு
பரனே தாலோ தாலோலோ!

என்ற அழகிய பாடலில் தெரிவிக்கிறார் ஷேத்திரக் கோவைபிள்ளைத்தமிழ் ஆசிரியராகிய சிதம்பர முனிவர்.

அம்மை தன் சக்திகளில் ஒன்றான மாயையை மலையுருவில் நிற்கச் செய்ததால் மாயாத்திரி எனப்படும் இம்மலை, வராகமுனி என்ற மாமுனிவர் இவ்விடம் தவம் செய்தனர். ஒரு அந்தணன்வ் மக்கள் பன்னிருவர் தவஞ்செய்த முனிவர் ஒருவரைக் கண்டு கேலி செய்ய அம்முனிவர் கோபித்து அவர்களைப் பன்றிக்குட்டிகளாகப் பிறந்து பசியுடன் தவிக்குமாறு சபித்தனர். பன்றிகளாகப் பிறந்த அவர்கள், தாய்ப்பன்றியை இழந்து பாலற்றுத் தவித்த காலத்தில், சிவபெருமான் தானே தாய்ப்பன்றியின் உருவங்கொண்டு பால் கொடுத்தனர். சிவஞான மயமான பாலைப்பருகிப் பன்னிருவரும் உடல் மட்டும் மனிதராகவும் தலை பன்றித் தலையாகவும் விளங்கி பாண்டியனுக்கு மந்திரிகளாயினர். அப்பன்னிருவரும் இநதமலையில் தவம் செய்ததால் பன்றிமலை என இம்மலை பெயர் பெற்றது. அவ்வரலாற்றை மதுரை திருவிளையாடற்புராணத்தில் பன்றிக்குப்பால் கொடுத்த படலம், பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் என இரண்டு படலங்களில் விவரமாகக் காணலாம்.

பஞ்ச பாண்டவர்களில் ஒருவனான அருச்சுனன் தவஞ்செய்து கொண்டிருந்தபோது சிவபெருமான் ஒரு வேடனாகவும், அம்மை ஒரு வேடுவப் பெண்ணாகவும் முருகனை ஒரு வேடுவக் குழந்தையாகவும் மாற்றி, சிவகணங்களை வேடர்கூட்டமாக மாற்றி வேட்டைக்கு வருவது போல்வர, யமதருயராசன் ஒரு பெண் பன்றியின் உருவம் எடுத்து எதிர்ப்பட சிவபெருமான் அதனை விரட்ட, அப்பன்றி தவநிலையிலிருந்த அருச்சுனனை அடைக்கலம் புகுந்தது. சிவபெருமான் அப்பன்றியைத் தனக்குக் கொடுக்குமாறுகேட்க, அருச்சுனன் மறுக்க இருவருக்கும் போர் மூள, அருச்சுனனின் வில்முறிந்தது. வில்லின் ஒரு துண்டால் அருச்சுனன் சிவபெருமானை அடிக்க, அந்த அடி உலகம் பூராவும்பட்டது. பிறகு அருச்சுனன் உண்மையை அறிந்து சிவபெருமானை வணங்கி, பாசுபதாத்திரம் பெற்றான் என்பது பிரசித்தமான கதை. பெண் பன்றி அருச்சுனனை அடைக்கலம் புகுந்த இடமாதலாலும் இம்மலைக்கு வராககிரி எனப்பெயர் உண்டாயிற்று. மூகன் என்ற அசுரன் அருச்சுனனைக் கொல்ல ஒரு பன்றி உருவம் கொண்டு வநதான். அவனைச் சிவபெருமான் கொன்றார். கொன்ற பன்றிதனக்கு எனச் சிவபெருமானும் அருச்சுனனும் சண்டையிட்டனர் என்றும் ஒரு வரலாறு உண்டு.

இத்தகைய தலத்தை அருணகிரிநாதர் தமது திருப்புகழில் அதிசயம் அனேகமுற்ற பழனிமலை என்கின்றார். சரவணபவா என்ற ஆறெழுத்து ஒன்றும் மலை-அதாவது பழனிமலை சடாட்சர மலை- அதனாலேயே சிவமயமாம் நின் பழனி (அகல்வினையினுட்சார் என்ற திருப்புகழில் கூறி

னார். பழனியின் திருநாமத்தை ஓதுபவருக்கு முருகனுடைய சடாட்ச மந்திரம் கூறிய பயன் உண்டாகும் என்றார்.

பழனியை சிவகிரி என்றும் அழைப்பர்

ஒரு சமயம் அகத்தியர் தன்னை வணங்கிய இடும்பன் எனனும் அரக்கனை நோக்கி ''வடதிசை யில் திருக்கேதாரத்திற்கு அருகிலுள்ள சிவகிரி-சக்திகிரி என்ற இரண்டு மலைகளையும் கொண்டு வருமாறு கட்டளையிட்டார். வடக்கே சென்ற இடும்பன் அகத்தியர் உபதேசித்த மந்திரத்தின் உதவிகொண்டு பிரமதண்டத்தைத் தோளுக்குத் தடியாகவும் எட்டுபாம்புகள் (அனந்தன் முதலான வற்றை) கயிறாகவும் கொண்டு இரண்டு மலைகளை யும் காவடிபோல கட்டித் தூக்கி தெற்கே வந்த வழியில் ஆவினன் குடியில் அவற்றைக் கீழேவைத்து இளைப்பாறி மீண்டும் எடுக்கமுயன்றபோது முடிய வில்லை. சிவகிரியின் மீது அழகிய சிறுவன் ஒரு வனைக் கண்டான்'' இங்கிருந்து போய்விடு'' என இடும்பன் கூற, ''இது எனது இருப்பிடம் நான் போகமுடியாது'' என அச்சிறுவன் பதிலளிக்க, கோபங்கொண்ட இடும்பன் அச்சிறுவன் மீது பாய்ந் தான். போர் முடிவில் மூர்ச்சையானான். அவ் விடத்தில் அகத்தியர் தோன்றி சிறுவனாக வந்த முருகப்பெருமானை வணங்கினார். இடும்பனும மூர்ச்சை தெளிந்து எழ, அவனுக்கு முருகப்பெரு மான் காட்சி தந்தார். ''என்னைப் போல காவடி எடுப்போருக்கு வேண்டும் வரங்கள் அளிக்க வேண் டும்'' என இடும்பன் வேண்டினான். இறைவன் இசைந்தார். பழனிமலையின் இடும்பன் என்ற பக் தனுக்குச் சன்னதி உள்ளது. இதுவே காவடி எடுப் பதன் வரலாறு.

திருவாவினன்குடி என இத்தலத்திற்குப்பெயர். (திரு) இலக்குமி, (ஆ) காமதேனு வான பசு, இனன் சூரியன்(கு) பூமிதேவி(டி) அக்கினி இவர்களால் பூசிக்கப்பட்டதால் இது காரணப்பெயர் என்பர். இந்த ஐவருக்கும் கோவிலில் சன்னதிகள் உள்ளன.

பேகன் என்ற வள்ளல் இவ்விடத்தைத் தலை நகராகக் கொண்டான். அக்காலத்தில் பொதினி எனப் பெயர்பெற்று நாளடைவில் பழனி என மரு விற்று என்பர். மலையடிவாரத்தில் பாலசுப்ரமண் யனாக விளங்கும் முருகன், மலைமீது தண்டபாணி யாக விளங்குகின்றார்.

மலை மீதுள்ள பழனியாண்டவரின் திருவுரு வம் போகர் என்ற சித்தரால் நல்ல மருந்துப் பொருட்கள் கொண்டு செய்யப்பட்டது. அதனா லேயே அபிடேசம் செய்யப்பட்ட நீர், பஞ்சாமிர் தம் ஆகியவை உடல்நோய்களை நீக்கும் என்பர்.

பழனியாண்டவர் மேற்கு நோக்கி நிற்பதால் கொங்குநாடு சேரநாடு இரண்டும் என்றும் செழு மையாக உள்ளன என்பர்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் என்ற பெரியவர்கள் இத்தலத்திற்கு மட்டும் ஆயி ரம் பாடல்கள் ''பழனித்திருவாயிரம்'' என்ற தலைப்பில் பாடியுள்ளார்கள். ''முருகப் பெருமான் யாருக்குச் சொந்தம்? கற்பக நாட்டுக் காவலனான அழகிய வள்ளிக்கா? கற்பக நாட்டுக் காவலனான இந்திரன் மகளான தெய்வயானைக்கா? அர்ச்சுன னுடன் போர்புரிந்த சிவபெருமானுக்கா? உலகிற்கு அருள்புரியும் உமையம்மைக்கா? திருமாலுக்கா? விநாயகப்பெருமானுக்கா? தேவர்கட்கா? கடலைக் குடித்த அகத்தியருக்கா? சடாட்சர மந்திர சபம் செய்யும் அனைவருக்கும் பொதுவா?வேறுமந்திரம் கூறுபவரின் விருப்பமான தெய்வமா?

கோவை வாயிதழ் குறமகளதுவோ?
காவை ஆள்வான் கன்னிகை தனதோ?
விசயனோடமர்புரி வேட்டுவன் தவமோ?
திசைமுழு தருள் உமைசெங்கைச் சிறப்போ?
மாயன்தனதோ? வழுவை மாமுகத்
தூயன் தனதோ? சுரகணத்தினதோ?
ஆழ்கடல் குடிததிட்டு அன்றுவிட்டான் முதல்
சூழ்கணமுனிவோர் சொந்தப் பொருளோ?
ஆறெழுத்துதுரைப்பார் அனைவர்தம்பொது வோ?
வேறெழுத்துரைப்பார் விருப்பும் ஆவதுவோ?
பாமலிதொல்சீர்ப் பழனிமாமலைமேல்
தோமற இமைக்கும் சுப்பிரமணியே''

என்கிறார்.

சமீபகாலத்தில் நம்மிடையே வாழ்ந்த கவிமணி தேசிகவிநாயகர் முருகனுக்குச் சாதியேது என அழகிய ஒரு பாடலைப் பாடினார். முருகனின் தந்தை (மலையாவி) மலையில் வாழ்பவர். முருக னின் மாமன் மாட்டிடையன் (கண்ணன்). ஒரு மைத்துனன் (வாணியன்) வாணியென்ற கலை மகளின் நாயகன். முற்பிறப்பில் திருமாலின் மக்க ளாக இருந்த பெண்கள் வள்ளி தெய்வயானை களாக வந்தனர் என்பர். பிரமனும் திருமாலின் மகனல்லவா? எனவே பிரமன் மைத்துனன் எனறே பாடினார்.

''தந்தை மலையாள் தாய்மாமன் மாட்டிடையன்
வந்த ஒருமச்சானும் வாணியனே-சந்ததமும

வண்முகத்தை எட்டும் அயில்வேலேந்து
பன்னிருகைச்

சண்முகற்கு சாதியெது தான?''

இப்பாடல் போன்ற அருணகிரி பாடல்

''ஆத்தாள் குறத்தி; என் அப்பன குமரன்; அரன்
எனக்கு
பார்த்தால் ஒருமுறை பாட்டனுமாம்;
பதினாலுலகும்
காத்தாள் என் பாட்டி; காமன் என் பாபன
கனவரையைப்
பேர்த்தாலும் பேர்க்க வொண்ணாப்
பிள்ளையார் என் பெரியப்பனே''

என் தாயார் குறத்தி; சிவபெருமான் பாட்டன். தநதை முருகன். பார்வதி என்பாட்டி. மன்மதன் என் மாமன். உலகத்தையே தூக்கி விடலாம் என் பெரியப்பாவான பிள்ளையாரைத் தூக்க முடியாது எனக்கூறி ''சாதியே கிடையாது. யாவரும் முருக னின் குழந்தைகள்'' எனக் குறிப்பிட்டு யாவரும் பேதமின்றி வாழ வழிகாட்டுகிறார்கள்.

குழந்தையுருவில் பழனியில் விளங்கும் குமர னின் குழந்தைகளாக நாம வாழ அவனருளை வேண்டுவோமாக.

தீபமங்கள சோதீ நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவகுஞ்சரி பாலா நமோநம-அருள்தாராய்

— வேலுமயிலுந் துணை. —

# சைவம் வளர்த்த மகளிர்

டாக்டர் செல்வி சிவபார்வதி

இணை இயக்குநர், கல்லூரி கல்வி இயக்ககம், சென்னை-6.

உலகம் உய்யவும், சைவ சமயம் தழைக்கவும் இம்மண்ணுலகில் அவதரித்த நாயன்மார்களில் மங்கை நல்லாரும் இடம் பெறுகின்றனர்; அன்னாரில் சைவம் வளர்த்தார் சிலர்; சைவம் வளரத் துணை புரிந்தார் பலர்; புனிதவதியார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகிய மும்மணிகளையும் சைவம் வளர்த்த மகளிர் எனலாம்.

இவர்களுள் காலத்தாலும் சீலத்தாலும் முதன்மை பெற்றவர் புனிதவதியார் என்ற இயற்பெயர் பெற்ற காரைக்கால் அம்மையாராவார். காரைக்காலில் தனதத்தன் என்ற பெரும் வணிகர்க்கு அருமை மகளாய்ப் பிறந்த புனிதவதியார் ''பிறந்து மொழிபயின்ற பின்னரெல்லாம் காதற் சிறந்து'' இறைவனடியே சிந்தித்து ஒழுகியவர். ''இம்மையே சோறும் கூறையும் தருவான்'' இறைவனே என வாழ்ந்து காட்டிய தம்பிரான் தோழருக்கு முன்னோடியாக விளங்கியவர்; இறைவனடியாரைக் காணின், கசிந்துருகி வேண்டுவன தந்து உபசரித்தல் அம்மையாரின் பண்பு. கடல் நாகைப் பெருவணிகன் பரமதத்தனை மணந்து மனையறத்தின் பண்புவழாமல் வாழ்ந்து வருங்கால், நம்பரடியார் அணைந்தால் நல்லதிரு அமுதளித்தும் செம்பொன்னும், நவமணியும், செழுந்துகிலும் முதலான கொடுத்தளிப்பது அவர் வழக்கம்.


அங்ஙனம் வாழ்ந்து வரும் நாளில் கணவர், இருமாங்கனியை இல்லத்திற்குக் கொடுத்தனுப்ப, பசியினால் மனைக்கு வந்த திருத்தொண்டர்க்கு (சமையல் முற்றுப் பெறாத நிலையில்) சோறும், மாங்கனிகளில் ஒன்றும் படைத்து அடியாரைஅமுது செய்வித்தார். நண்பகல் மனைக்கு வந்த கணவனுக்கு உணவோடு எஞ்சிய ஒரு மாங்கனியையும் படைக்க, மதுரமிகுந்த மாங்கனி மற்றொன்றையும் கொணர்ந்திடுக எனக் கூறியகணவனுக்கு, உண்மையைக் கூறின் கணவன் ஐயுறுவானோ என அஞ்சி உள்ளே சென்று ''மெய்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள் மனங்கொண்டு வணங்குதலும்'' அம்மையாருக்கு மாங்கனி ஒன்று கிடைக்கின்றது. அதனை ருசித்த பரமதத்தன் ஞானக்கனியின் சுவை உணர்ந்து, மூவுலகில் பெறற்கரிய கனி இது ஏது என வினவ, உண்மை சொல்லவேண்டும் என்ற சீலத்தால் நடந்ததைக் கூற கணவன் தெளியானாய் ''அங்ஙனமேற் மீண்டுமொரு கனி அவனருளால் அழைத்தளிப்பாய்'' என மொழிய, அடியார்க் கெளியனான இறைவன் அம்மையாருக்கு மீண்டுமொரு கனிகொடுப்ப, கண்ட கணவன் விதிர்த்து அஞ்சி, அம்மையின் தெய்வத்தன்மையை அறிந்து அவளை விட்டு நீங்கினான். கடல் வாணிபம் செய்யச் சென்ற பரமதத்தன் மதுரையம்பதியில் தங்கி, ஆங்கு மங்கையொருத்தியை மணந்து, பிறந்த தன் பெண் மகவுக்குப் புனிதவதி என்ற பெயருமிட்டு வாழலானான். இச்செய்தியறிந்த புனிதவதியாரின் பெற்றோர் அம்மையை உரிய இடத்தில் சேர்த்தலே முறையென்று எண்ணி மதுரைக்கு அழைத்துச் செல்ல அதனை அறிந்த பரமதத்தன் மனைவி, மகளுடன் விரைந்து வந்து, அம்மையாரின் காலில் வீழ்ந்து வணங்கி, 'மானுடமிவர்தாமல்லர்; நற்பெருந்தெய்வமாதல் நானறிந்தே அகன்றேன்'' எனக் கூறவும், அன்றே அம்மையாரின பவச் சார்பு நீங்கியது. ஈசன் அருளால் கணவர்க்காகத் தாங்கிய ஊன்பொதி தசையுடலை உதறி என்பு உடல் தாங்கிப் பேய் வடிவம் பெற்றார். கண்டார் அனைவரும் தொழுதஞ்சி அகன்றுபோக அன்று முதல் இறைவனையே என்புருகப்பாடி வணங்கித் துதிக்கும் ஓர் அரிய வரலாறு படைத்தார்.

கயிலைக்குச் சென்று இறைவனைத் தரிசிக்க வேண்டி, காலாற் நடக்க அஞ்சி, தலையால் நடந்து கயிலை மலை ஏறிச் செல்ல, இவ்வற்புதத்தைக் கண்டு உமை அதிசயிக்க, அனைத்துயிர்க்கும் தாயுமான இறைவன் தன் வாயால் ''அம்மையே'' என்று அழைக்கும் பேறு பெற்றார். இறைவனை நோக்கிப் ''பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க வேண்டும்'' என விண்ணப்பம் செய்து, அவரானணப்படி திருவாலங்காடு சென்று இறைவனின் ஆனந்தத் தாண்டவம் கண்டு அவரடியின் கீழ் என்றும் இருக்கும் அமரநிலை அடைந்தார்.

சைவசமயக் குரவர்களும், தாயுமானார் இராமலிங்க வள்ளலார் உள்ளிட்ட அனைவரும் துறவற நெறியினை மேற்கொண்டமைக்கு இவரே வித்திட்டவர் ஆகின்றார். அற்புதத் திருவந்தாதி திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகிய மூன்று நூல்களைக் காரைக்கால் அம்மையார் இயற்றியுள்ளார். இசைத்தமிழும், இயற்றமிழும் வல்ல பெருமை அம்மையாருக்கே உரியது. இவரது பாடல்கள் எளிய இனிய நடையும் ஆழ்ந்தகன்ற நுண்ணிய கருத்துக்களும் கொண்டவை.

அம்மையார் இறைவனிடத்துக் கொண்ட அன்பு அளவிடற்கரியது. ''பிறந்து மொழி பயின்ற பின்னரெல்லாம் காதற்சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்'' என்றும், ''அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம்'' என்றும் அவர் கூறியுள்ளவை அவரது உண்மை நிலையை அறிவிக்கும் பாடல்கள் ஆகும்.





''இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்'' என்றும் ''அவனே இருசுடர்தீ ஆகாசமாவான்'' என்றும் இறைவனது தத்துவத்தை அறிவிக்கின்றார். சிவபெருமானுக்கு ஆளாகிப் பணி செய்திருப்பதும், அவரது அடியார்களுக்கு அடிமைத் தொண்டு செய்திருப்பதுவுமே தம் பிறவிப் பயன்; அவையே உயிர்கள் அனைத்திற்கும் உறுதிபயப்பது என்று அம்மையார் துணிவாக அறிந்து உலகிற்கும் உணர்த்துகின்றார். ''யானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்'' என மணிவாசகப் பெருமான் கூறி மகிழ்ந்ததைப் போன்று, ''யானே தவமுடையேன் என்நெஞ்சே நன்னெஞ்சம் யானே பிறப்பறுப்பான் எண்ணினேன: யானேயக் கைமா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்று அம்மானுக் காளாயினேன்'' எனப் பெருமிதத்தோடு கூறும் பாடல் அம்மையார்கண்ட சைவ நெறியின் முடிவாகும்.

இனி திலகவதியாரின் மாண்பினையும் அவர் சைவ நெறியினை வளர்த்த பாங்கினையும் காண்போம். இராமகிருஷ்ண பரம அம்சர் மட்டும் குருவாகக் கிடைத்திராவிட்டால் உலகம் எங்ஙனம் விவேகானந்தரை அறிந்திருக்க முடியாதோ, அங்ஙனமே திலகவதியார் தமக்கையாகக் கிடைத்திருக்கவில்லை எனின், நாவுக்கரசரை உலகம் அறிந்திருக்க வழியில்லாமற் போயிருக்கும.

திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரின்கண் வேளாண் குலத்தில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகளாய்ப் பிறந்த திலகவதியாருக்கு உரிய பருவத்தே மணமுடிக்க எண்ணிப் படைத்தலைமை பூண்டொழுகும் கலிப்பகையார் என்ற ஆண்டகைக்கு மணம் பேசுகின்றனர். அந்நிலையிற் போர் மேற்சென்ற வீரர் கலிப்பகையார் போரில் தாமும் உடன் உயிர் துறக்க தானும் தீப்புகுந்து உயிர்விட முற்படுகிறார் திலகவதியார். அப்போது பெற்றோரும் இறந்த நிலையில், தனித்து நின்ற தம்பி மருள் நீக்கியாரின் வேண்டுதலுக்கிணங்க மனம் மாறி ''தம்பியர் உளர் ஆக வேண்டும்'' என வைத்த தயவினால் ''அம்பொன் மணிநூல் தாங்கும்

பருவத்தே, அதனை நீத்து, ''அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி'' வாழத்தலைப்பட்டார். அனைத்தும் விழலுக்கிறைத்த நீர் ஆயின; உலக நிலையாமை கண்ட தம்பி மருள்நீக்கியார், கொல்லாமையே உயிர் நாடியாகக் கொண்ட சமண சமயத்தை விரும்பியவராய்ப் பாடலிபுத்திரம்சேர்ந்து அச்சமய அருங்கலை நூற்களெல்லாம் கற்றுத் தருமசேனர் என்ற பட்டத்துடன வாழலாயினார். இதனை அறிந்த திலகவதியார் மனம் துடிததுச் சுற்றத் தொடர்பொழியத் தூய சிவ நன்னெறியே சேர்வதற்குத் திருவதிகை சென்று வீரட்டானேஸ்வரர் ஆலயமடத்தில் தங்கி இறைவனுக்குச் சரியைப் பணிகள் புரிந்து வருவராயினார்.

''நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி ''

எனத் திருநாவுக்கரசர் சரியை நிலையைப் பின்னர் எடுத்துக் காட்டியமைக்கு இலக்கணமாய் வாழ்ந்து வரும் நாவில், 'பரசமயக்குழியில் வீழ்ந்துழலும் தம்பியைத் தடுத்தாள வேண்டும் என இறைவனிடம் முறையிட, செவ்சாய்த்த இறைவன் மருள்நீக்கியாருக்குத் தீராத சூலைநோயை அளிக்கின்றார். மந்திரமும், மருத்துவமும் குணப்படுத்தாத நிலையில், தமக்கையை நினைந்து திருவதிகை மடத்திற்கு ஓடிவந்து தமக்கையாரிடத்துச் சரண் அடைகின்றார்; தம்பியை எதிர்கொண்ட தமக்கையார் அவரைத் திருவதிகைக் கோயிலுக்கு அழைத்துச் செல்லுமுன், பரசமயத் தொடர்பு தீரச் சிவதீட்சையருளும் வகையில் அஞ்செழுத்தோதித் திருநீற்றை இடுகின்றார். கோயிலுக்குச் சென்ற தம்பியார் ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என நெஞ்சுருகப்பாடி இறைவனிடம் தன் சூலைக்கொடுமையை நீக்குமாறு வேண்ட, உடல் நலம் பெற்றதோடு, செந்தமிழின் சொல்வளம் செறியப் பதிகங்கள் பாடிய பான்மையினாற் 'நாவுக்கரசன்' என்ற நாமத்தை இறைவனால் அளிக்கப் பெறுகின்றார்.

இங்ஙனம் பரசமயக்குழியினின்றும் கரையேறி நாவுக்கரசனெனும் நந்நாமம் பெற்று உலகம் உய்ய உழவாரப் பணிசெய்து தாசமார்க்கத்திற்கு ஒரு வழிகாட்டியாய் அருளாளர் அப்பர் நின்றமைக்குத் திலகவதியாரின் சமயத்தொண்டு வாழ்வே காரணம் எனில் மிகையனறு.

வளவன் மகளாய்ப்பிறந்து பாண்டியன் நெடுமாறனின் பட்டத்தரசியாய் விளங்கி ஆலவாயில் சைவம் அருகாமல் காப்பாற்றிய மங்கையர்க்கரசியாரின் தொண்டினை இனிக் காண்போம். களப்பிரர்கள் ஆட்சியில் அரசர்களின் ஆதரவைப் பெற்றுத் தமிழ் நாட்டில் பரவிய சமண சமயம் பாண்டி நாட்டில் நெடுமாறனின் ஆதரவைப் பெற்றுப் பெருகி வளரலாயிற்று. அப்பொருவில் சீர்பகுதியின்கண் அருகர்பள்ளியும், பாழியும் நிறைய எங்கும் சமணர்கள், பறிமயிர்த்தலையும் பாயும், பீலியும், தடுக்கும் கொண்டு திரியலாயினர். இந்நிலையைக் கண்டு பாண்டியன் நெடுமாறனின் இன்னுயிர் மனைவியார் மங்கையர்க்கரசியாரும், மதியமைச்சர் குலச்சிறையாரும், மதுரையில் சைவம் தேய்ந்து நலிவுற்று அழிவதினின்றும் தடுத்துக் காக்கும் அரண்களாக நின்றனர். மங்கையர்க்கரசியார் தன் ஆருயிர்க் கணவர் மனம் மாறி சமணத்தினின்றும் சைவம் சேரவும், நாடெல்லாம் சைவம் தழைக்கவும், ஆலவாய் அமர்ந்தபிரானை வணங்கி நித்தமும் வேண்டிவரும் நாளில் புகலிக் காவலராம் ஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் தங்கியுள்ளார் என்ற செய்தி கேட்கின்றார். தம் பரிசனங்களைத் திருமறைக் காட்டிற்கு அனுப்பி, ஞானசம்பந்தர் பாண்டி நாட்டிற்கு வந்து, சமணர்களின் பரசமயக் குழியிலிருந்து மன்னரையும் மக்களையும் காதது்ச் சைவ நீதி உலகெலாம் நிலவ அருள்புரிய வேண்டும் என விண்ணப்பம் செய்கின்றார். சண்பையர் கோனும் அம்மொழியை ஏற்றுப் பாண்டி நாடு அடைந்து ஒரு மடத்தில் அடியார்களுடன தங்க, சைவ அடியார்களைக் கண்டஞ்சிய சமணர்கள் அவர்கள் தங்கிய மடத்திற்குத் தீ கொளுவுகின்றனர். இப்பாதகச் செயலை அறிநத ஞானசம்பந்தர் ''சைவர் வாழ் மடத்து அமணர்கள் இட்ட தழல்போய்ப்பையவே சென்று பாண்டியற்காகென'' ஆலவாய் அண்ணலை நினைந்து பதிகம் பாட, பாண்டியன் நெடுமாறன் வெப்பு நோயால் பெருந்துன்பம் அடைகின்றான்; கண்டார் அனைவரும் அதிர்ச்சியடைகின்றனர். சமணர்கள் மந்திரங்களைச் செபிததும் குண்டிகை நீர் தெளித்தும், பீலியால் தடவியும் நோய் மென்மேல் வளர நெடுமாறன் தாங்காது தளர்கின்றான். அந்நிலையில மங்கையர்க்கரசியார் காழிப் பிள்ளையாரை ஈண்டு அழைப்பின் அவனருளாலே இது நீங்கும் என்று கூற ஆறுதல் அடைகின்றான் அரசன். ''யானுற்ற பிணியைத் தீர்ப்பின் வென்றவர்ப் பக்கம் சேர்வேன்'' என மங்கையர்க்கரசியார் பெருமகிழ்ச்சியடைகின்றார். அவர்தம் விண்ணப்பத்திற்கிரங்கிய ஞானசம்பந்தர் தென்னனைக்கண்டு ''மந்திரமாவது நீறு'' என்ற திருப்பதிகம்பாடி வெண்ணீறு கொண்டு தன் திருக்கையால் தடவ அக்கணமே வெப்பு நோய் நீங்கப் பொய்கைப்போல் குளிர்ச்சி பெற்றான் மன்னன; வன்பிணி நீக்க வந்த ஞானசம்பந்தர் பாதம் நண்ணி நான் உய்ந்தேன் என்று அன்புமிகக்கூற மொழிந்து அன்று முதல் சிவநெறியே சேர்ந்து உயர்ந்தான்; மதுரையம்பதியில் சைவ நெறியே பரவி நிறைநதது.

இங்ஙனம் தன் கணவனும் நாடும் உய்யத் தனியே நின்று சைவநெறியைக் காத்தமை மங்கையர்க்கரசியாரின ஒப்பற்ற தனித் தொண்டாகும்.

செயற்கரிய செய்த பெரியார்களில் சிறுத்தொண்டருக்கு முதலிடம் அளிக்கின்றார் பட்டினத்தடிகள். பெற்ற மகனை வாளால் அரிந்து கறி சமைத்து அடியார்க்குச் சிறுத்தொண்டர் படைத்தார் என்றால் அச்சிறப்புக்கெல்லாம் காரணம் சிறுத்தொண்டரின் மனைவியாகிய திருவெண்காட்டு நங்கையேயாகும். தந்தை தன் குழந்தையை வாளால் அரிந்தமை பெரிய காரியம் அன்று; பத்து திங்கள் சுமந்து அங்கமெல்லாம் நொந்து பெற்றுச் சீராட்டி வளர்த்த ஒரே மகனைத் தாய் தன் மடியில இட்டுக்கொண்டமை உலகில் வேறெங்கும் காணாத செயல் ஆகும். நேரில் காணாமலே திருநாவுக்கரசிடததுப் பெருங்காதல் பூண்டு விளங்கிய அப்பூதியடிகளின் மனைவியாரும் அங்ஙனமே செயற்கரிய செயல்புரிந்தவர். பாம்பு தீண்ட மாண்ட மகனைப் பாயில் இட்டு மூடி வைத்து அடியார்க்கு விருந்து படைத்த பாங்கை அப்பூதியாரின் மனைவியாரிடத்தே காண்கிறோம்.

இவ்வாறே சைவ மகளிர் பலர் சைவம் தழைக்க உறுதுணையாக இருந்த எண்ணற்ற மகளிரைத் தெய்வத்தமிழ்ச் சேக்கிழார் நமக்குக் காட்டுகின்றார். ஒவ்வொரு ஆண்மகனிற் சிறப்புக்கும் காரணமாக ஒரு பெண் இருக்கிறாள் என்ற உண்மைக்கு ஏற்ப ஒவ்வொரு நாயன்மாரின் தொண்டுக்கும், செம்மைக்கும், சிறப்புக்கும் அடித்தளமாக பெண்மணிகள் கண்மணிகளாக வாழ்ந்திருப்பதை அறிகிறோம்.

# தொண்டைநாட்டு வைணவத் திருத்தலங்கள்

முன்தொடர்ச்சி

நித்திலக்கோ

15. திருப்புட்குழி.

விசயராகவப்பெருமாள், மரகதவல்லி.

அலங்கெழு தடக்கை ஆயன்வா யாம்பற்
கழியுமால் என்னுள்ளம் என்னும்
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்;
போதுமோ நீர்மலைக் கென்னும்;
குலங்கெழு கொல்லிக் கோமளவல்லி,
கொடியிடை நெடுமழைக் கண்ணி,
இலங்கெழில் தோளிக் கென்னினைந் திருந்தாய்?
இடவெந்தை எந்தை பிரானே!

—பெரியதிருமொழி.

திருமங்கையாழ்வாரின் இரண்டு பாசுரங்களைப் பெற்ற திருபுட்குழி, காஞ்சிக்கு மேற்கே ஏழு கல் தொலைவில் இருக்கும் திருக்கோயில்.

16. திருநின்றவூர்.


பக்தவச்சலப்பெருமாள், என்னைப்பெற்ற தாயார்.

பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டு பட்டுப்
பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்று மோதி
மாண்டவத்தம் போகாதே வம்மின்; எந்தை
எனவணங்கப் படுவானை, கணங்களேத்தும்
நீண்டவத்தக்கருமுகிலை, எம்மான்றன்னை
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார்சோலை
காண்டவத்தைக் கனலெரிவாய் பெய்வித் தானைக்
கண்டதுநான் கடல்மல்லைத்தலசயனத்தே.

—பெரியதிருமொழி.

(அவத்தம்-அவத்யம் என்னும் வடசொல் திரிபு: பொல்லாங்கு என்பது பொருள. நித்திலம்-முத்து; தொத்து-பூங்கொத்து; நின்றவூர் நித்திலத்தை-திருநின்றவூரிலே நிற்கும் அயர்வு அகற்றும் முத்துத்திரள்போலே குளிர்ச்சி பொருந்திய வடிவோடு இருப்பவனை.

சோணாட்டுத் திருக்கண்ணமங்கைப் பெருமானைப் பாடும்போது, 'நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை (பெ.தி.மொ) என்றே ஆழ்வார் பாடியுள்ளார்.)




திருமங்கையாழ்வாரின் இரண்டு பாசுரங்களைப்பெற்ற திருப்பதி.

சென்னை-அரக்கோணம் இருப்புப்பாதையிலுள்ள திருநின்றவூர் இரயில் நிலையத்தினின்று தெற்கே ஒன்றரை கி.மீ. தொலைவு.

இங்குச் சிவன் கோயிலும் இருக்கிறது. சிவபெருமானை உள்ளத்து இருத்தி மனக்கோயில் கட்டிய பூசலார் நாயனார் பிறந்தருளிய தலம் இது.

17. திருஎவ்வுள் (திருவள்ளூர்)

வீரராகவப் பெருமாள், கனகவல்லி.

முனிவன், மூர்த்தி, மூவராகி
வேதம் விரித்துரைத்த
புனிதன், பூவைவண்ணன், அண்ணல்
புண்ணியன், விண்ணவர்கோன்
தனியன், சேயன், தானொருவன்
ஆகிலும் தன்னடியார்க்(கு)
இனியன், எந்தை, எம்பெருமான்
எவ்வுள் கிடந்தானே!

—பெரியதிருமொழி

(அண்ணல்-தலைவன்; புனிதன்-தன்னலம் கருதாமல். பிறர் நலமே கருதும் தூயவன். புண்ணியன்-பிறர் நோவுபடப் பொறுக்கமாட்டாதவன்)

திருஎவ்வுளூர் என்னும் ஊர்ப்பெயர் திருவள்ளூர் என்று மருவி வழங்குகிறது.

சென்னை-அரக்கோணம் இருப்புப்பாதையில் ஓர் இரயில் நிலையம். இரயில் நிலையத்திலிருந்து கோயில் மூன்று கி.மீ. தொலைவில் உள்ளது.

எவ்வுளூர் வீரராகவரை வள்ளலாரும் பாடியுள்ளார்!



18. திருநீர்மலை.

நீர்வண்ணன், அணிமாமலர்மங்கை.

பேசும் அளவன்று இது; வம்மின் நமர்!
பிறர் கேட்பதன்முன், பணிவார் வினைகள்
நாசமது செய்திடும் ஆதன்மையால்
அதுவே நமது உய்விடம்; நாள்மலர்மேல்
வாசமணி வண்டு அறைபைம்புறவில்
மனம் ஐந்தொடு நைந்துழல்வார் மதியில்
நீசர் அவர் சென்றடையா தவனுக்கிடம்
மாமலை ஆவது நீர்மலையே

—பெரியதிருமொழி.

(ஆதன்மையால்-ஆகையால், உய்விடம்-ஈடேற்றம்) ஆலயம் சென்றாலும் அகத்தோடு ஐம்புலனும் அடக்கினாலன்றி ஆண்டவனை அடையார்; அவனைப் பணிவார்க்கு (அவனது சொற்படி கேட்பவர்களுக்கு) அவர்கள் வேண்டுவதற்கு முன்பே பாவம் அறும்; இது (இறைவன் திருவருள்) பேசும் அளவு அன்று.

திருநீர்மலை சென்னையை அடுத்து உள்ள விண்ணகரம். பல்லாவரத்திலிருந்து மேற்கே ஐந்து கி.மீ. தொலைவில் இருக்கிறது.

கீழே ஒரு கோயிலும் 60 மீட்டர் உயரமுள்ள சிறு குன்றின் மீது ஒரு கோயிலும் உள்ளன.

19, திருஇடவெந்தை (திருவிடந்தை)

நித்திய கலியாணர், கோமளவல்லி.

'ஓதிலும் உன்பேர் அன்றிமற் றோதாள்;
உருகும் நின் திருவுரு நினைந்து;
காதன்மை பெரிது; கையறவுடையள்;
கயல்நெடுங் கண்துயில் மறந்தாள்;
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது;
தெள்ளியள்; வள்ளிநுண் மருங்குல்,
ஏதலர் முன்னா என்நினைந்திருந்தாய்?'
இடவெந்தையெந்தை பிரானே!

—பெரியதிருமொழி.

(காதன்மை-காதல் தன்மை என்பது காதன்மை என்று மருவியது. பேதை-மேல் வருவது நிருபிக்கத்தக்க (ஆய்ந்து அறியத்தக்க) அறிவு இல்லாதவள்.)

சென்னையினின்றும் மாமல்லபுரத்திற்குக் கடற்கரையை ஒட்டிச் செல்லும் நெடுஞ்சாலையில் மாமல்லபுரத்திற்கு ஒன்பது கி.மீ. முன்னால், சாலைக்கு அண்மையில் இத்தலம் இருக்கிறது.

20. திருக்கடல்மல்லை (மாமல்லபுரம்)

தலசயனத்து உறைவார், நிலமங்கை

புலன்கொள் நிதிக் குவையோடு புழைக்கைம்மா
களிற்றினமும்
நலங்கொள் நவ மணிக்குவையும் சுமந்தெங்கும்
நான்றொசிந்து
கலங்களியங் கும்மல்லைக் கடல்மல்லைத தலசய
னம்,
வலங்கொள்மனத்தாரவரை வலங்கொள் என்
மடநெஞ்சே!

—பெரியதிருமொழி.

(நான்று-நால்' என்னும் வினையடியாகப் பிறந்த செய்து என்னும வாய்பபாட்டு வினையெச்சம், நாலுதல்-தொங்குதல் ஈண்டுத் தாழ்ந்து அசைதல். கலங்கள்-கபபல்கள்)

சென்னைக்கு 55 கி.மீ. தொலைவில கடற்கரையில் உள்ளது.

பல்லவர் காலத்துச் சிறபச் செல்வங்களால் அனைத்துலகப் பயணிகளின் கருத்தைக் கவரும் பழந்துறைமுகப் பட்டினம்.

பூதத்தாழ்வார் பிறந்தருளிய தலம இது.
திருமங்கையாா 26; பூதத்தார் 1 (ஆக 27)

21. திருவல்லிக்கேணி.

பார்த்தசாரதி, உருக்கிமினிப்பிராட்டி,
வேதவல்லி

வேதத்தை வேதத் தின் சுவைப் பயனை,
விழுமிய முனிவரர் விழுங்கும்
கோதலின கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத் தோர்தொழு தேத்தும்
ஆதியை, அமுதை, என்னை ஆளுடை
அப்பனை-ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக்கேணிக்கண் டேனே!

—பெரிய திருமொழி.

(கனி, களிறு, அமுது என்பன உவம ஆகு பெயர்கள். கனியை கண்டபோதே நுகரலாம்படி இருப்பவன் இறைவன்)

இது சென்னை நகரத்திலிருக்கும் சிறந்த திருப்பதி. சென்னை மாநகரில் திவ்வியப்பிரபந்தம் பெற்றபதி இஃது ஒன்றே.

---

## மாறா பக்தி தருவாய் முருகா !

| | |
|---|---|
| அற்றைக் | கிறைதேடி |
| அத்தத்திலும் | ஆசை |
| பற்றித் | தவியாத |
| பற்றைப் | பெறுவேனோ? |
| வெற்றிக் | கதிர்வேலா |
| வெற்பைத் | தொளை சீலா |
| கற்றுற் | றுணர்போதா! |
| கச்சிப் | பெருமானே! |

—அருணகிரிநாதர்

---

மயிலாப்பூர் என்பது அக்காலத்தில் படைவீட்டுக்குப் (நகரத்திற்கு) பெயர்.

வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்
முத்தம்
அந்தி விளக்கு மணிவிளக்காம்-எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்
திருவல்லிக் கேணியான் சென்று''

என்று மூன்றாந் திருவந்தாதியில், இவ்வூரில் பிறநத பேயாழ்வாரும், பிராட்டிக்கு முதன்மையுள்ள ஊராகத் திருவல்லிக்கேணியைச் சிறப்பித்துள்ளார்

இக்கோயிலுக்கு,
''மன்னு தன்பொழிலும்வாவியும் மதிளும்
மாடமாளிகையு மண்டபமும்
தென்னன் தொண்டையர்கோன்'
செய்தான் என்று பாடுவார் திருமங்கையாழ்வார். இம்மன்னவன் தந்திவர்மன் தந்தையாகிய பல்லவ மல்லன் ஆகலாம் என்பது திரு மு.இராகவையங்கார் கருத்து தந்திவர்மன் கல்வெட்டுத் திருவல்லிக்கேணியில் உள்ளது.

22. கடிகை-(கடிகாசலம-சோளிங்கபுரம்)

(யோகநரசிம்மர், அமுதவல்லி.

மிக்கானை, மறையாய் விரித்த விளக்கை, என்னுள்
புக்கானைப்புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத தடங்குன்றின் மிசையிருநத
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே.

—பெரியதிருமொழி.

சென்னைகு வடமேற்கே 60 கி.மீ. தொலைவிலுள்ளது. இருப்புப்பாதையிலும், நெடுஞ்சாலையிலும் செல்லலாம.


100 மீட்டர் உயரமுள்ள ஒரு குன்றின் மீது யோக நரசிம்மரும், அதற்கு எதிரே 60 மீட்டர் உயரமுள்ள மற்றொரு குன்றினமீது ஆஞ்சனேயரும் உள்ளனர்.

(திருமங்கையாழ்வார் 3, பேயாழ்வார் 1 (ஆக 4)


இராச சூயயாகம் நிகழ்த்துவது குறித்துக்
கிருஷ்ணருடன் தருமர் கலந்தாலோசிக்கிறார்
சித்திரபாரதம்
கதை வடிவம் செவ்வேள்
படம்: MN ராஜா
இராச சூய யாகம் வெற்றி பெறவேண்டுமானால், நரமேத யாகம் செய்வதற்கு ஆயிரக் கணக்கில் அரசர்களை அடைத்து வைத்திருக்கும் மகத மன்னன் ஜராசந்தனை முதலில் நாம் கொன்றாக வேண்டும்.
ஜராசந்தனை வெல்ல வீமனால் மட்டுமே முடியும். நான் வீமார்ச்சுனர்களுடன் இன்றே மகதம் புறப்படுகிறேன்.
சென்று வாருங்கள், வென்று வாருங்கள்.
மூவர் முனிவர் வந்துள்ளார்கள்
வரச்சொல்
தூணை ஒத்த தோள்கள். அதில் வில்லின் தழும்புகள். நீங்கள் மறையவர்களாக இருத்தல் இயலாது. யார் நீங்கள்?
யாம் யதுகுலத்துக் கிருஷ்ணன். இவர்கள் வீமனும் அர்ச்சுனனும். அரசர்கள் உம் ஊர்ப்புக அனுமதி இல்லாததால் முனிவர் போல் வந்தோம். எம்மூவருள் ஒருவருடன் துவந்தயுத்தம் செய்.
னக்கு அஞ்சி அன்று கடலுக்குள் துவாரகா-
புரி அமைத்துக் கொண்ட கண்ணா! நீ
ஒரு கோழை. அர்ச்சுனன் சிறியவன். வீமன்
ன்னுடன் போர் புரியட்டும்.



ஜராசந்தனும், வீமனும் பூமி நடுங்க ஏழு குலபர்வதங்கள் நடுங்க, அட்டதிக்குகளும் நடுங்க மற்போர் புரிகிறார்கள். பதினைந்து நாட்கள் இரவு பகலாக அடித்துக்கொள்ளும் இருவரும் இறுதியில் மூர்ச்சையாகி விழுகிறார்கள்.
வீமன் முதலில் மூர்ச்சை தெளிந்து எழுகிறான். ஜராசந்தனை இரு கூறாகப் பிளக்கிறான்.
என்ன அதிசயம்! பிளக்கப்பட்ட இரு கூறுகளும் ஒன்றுசேர ஜராசந்தன் மீண்டும் உயிர்ப் பெற்றுப் போரிடுகிறான்.
வீமன் ஜராசந்தனின் உடலை மீண்டும் இரு கூறுகளாகப் பிளந்து தலையும் கால்களும் மாறுபட வீச ஜராசந்தன் மடிகிறான்.
"பலே வீமா பலே! இவன் தந்தை பிருகத்ரதன்; சண்ட கௌசிக முனிவரைத் தரிசித்து வரம் வேண்டினான்."
இதோ மாங்கனி; இதை உண்பால் புத்திர பாக்கியம் உண்டாகும்.
"பிருகத்ரதன் மாங்கனியை இருகூறாக்கி தன்-னிரு மனைவியருக்கும் வழங்கிட இருவரும் பாதி பாதியாய் குழந்தை பெற்றார்கள்.
"இவற்றை நகருக்கப்பால் வீசி எறிக!"
ஜரை என்னும் அரக்கி, அவ்வுடல்களின் இரு பாதிகளையும் இணைத்துப் பார்க்க குழந்தை உயிர்பெற்றது. அரக்கியால் உயிர்பெற்ற ஜராசந்தன் அரக்கனாகவே வாழ்ந்தான். இன்று அவன் மடிய மண்பதை உய்ந்தது.
ஜராசந்தனின் மகன் ஜகதேவனுக்கு மகுடம் சூட்டி, வீமார்ச்சுனர்களுடன் இந்திரபிரத்தம் வந்து சேரும் கிருஷ்ணரைக் கோலாகலமாக



# கந்தவேள் கருணை

## [33]

### டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

கந்தவேள் ஏமகூடத்தில் எழுந்தருளியிருந்ததை உணர்ந்த நாரதர் ஆயிரம் தந்தியையுடைய மகதி வீணையை மீட்டிக்கொண்டு சூரனின் தலைநகரான வீர மகேந்திரபுரிக்குச சென்றார்.

சூரபன்மன் மாளிகையை அடைந்து அவன் மிகுந்த சிறப்போடு வீற்றிருத்தல் கண்டார். இத்தீயோன் வாழ்வு விரைவில் முடியவேண்டும் என்று மனத்தில் கருதிக் கொண்டு வாயினால் ஆசி கூறினார்.

நாரதரை நோக்கிச் சூரபன்மன் ''நீ யார்? எங்கிருந்து என்ன காரியமாக வந்தாய்?'' என்று வினவினான்.

நாரதர் பின்வருமாறு கூறினார்.

''நான் சிவபெருமான் இருக்கும் வடகயிலையில் வாழ்பவன்; என் பெயர் நாரதன்; உங்கள் குலகுருவாகிய சுக்கிராச்சாரியாரின் நண்பன்; ஆசைகளை வெறுத்துத் தவம் செய்பவன். உங்கள் நலத்தை என்றும் விழைபவன். உன்னிடம் ஒன்று தெரிவிக்க வந்தேன். சிவபெருமான் உன்னை அழிப்பதற்காகத் தன் நெற்றிக் கண்ணிலிருந்து கந்தன் என்ற புதல்வனைத் தோற்றுவித்தார். இந்திரன் முதலிய தேவர்கள் அந்தக் கந்தனை இறைஞ்சித் தாங்கள் படுந்துன்பங்களைக் கூறினர். அவர்கள் முறையீட்டைக் கேட்ட கந்தன் அஞ்சேல் என்று கூறி பூத சேனைகளுடன் பூமியில் வந்தான்.

உன் தம்பி தாரகனையும் கிரவுஞ்ச மலையையும் வேற்படையால் அழித்தான். பின்னர் செந்தி மாநகரம் வந்து தங்கி ஒரு தூதனை உன்னிடம் அனுப்பினான். தூதன் மீண்டபின் தன் சேனையோடும் கடலைக் கடந்து இந்நகர் வடபால்பாடி வீடு அமைத்துள்ளான். இதைத் தெரிவிக்க வந்தேன்'' என்றனர்.

நாரதர் கூறியதைக் கேட்ட சூரபன்மனின் கண்கள் அனலைக் கக்கின. அந்தச் சிறுவன் மகேந்திரபுரியை இந்திரலோகம், பிரமலோகம், விஷ்ணுலோகம் போல் சர்வ சாதாரணமாக எண்ணிக் கொண்டிக்கிறான் போலும். ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆட்சி செய்பவன் நான். என் ஆணையை மதியாமல் கடலைத் தாண்டி வந்த அந்தச் சிறுவனை இப்பொழுதே வென்று வருவேன். இதற்கு நானே போக வேண்டிய அவசியமில்லை. என் புதல்வன் பானுகோபனை அனுப்புகிறேன். உமது கண்களாலே அவ்ன் வெற்றியுடன் திரும்புவதைக் காணலாம்.'' என்று கூறினான்.

''சூரபன்மா! இனியும் தாமதம் செய்யாமல் அக் குமரனோடு போர் செய்ய உடனே படைகளை அனுப்பு. வெற்றி கிடைக்க வேண்டும் என்று நான் போய்த் தவம் செய்கிறேன்'' என்று கூறிவிட்டு ககன மார்க்கத்தில் புறப்பட்டுவிட்டார் நாரதர். யாருடைய அழிவையும் யாருடைய வெற்றியையும் அவர் மனத்தில் கொண்டிருந்தார் என்பதைச் சூரன் புரிந்துகொள்ள முடியுமா?

தனது அருகில் நின்ற ஒற்றர்களை அழைத்துச் சூரபன்மன், ''வருணனை விரைவில் கொண்டு வாருங்கள்' என்று உத்தரவிட்டான். அவ்வாறே வருணன் அழைத்து வரப் பட்டான். ''வருணனே! குமாரனும் பூத சேனைகளும் கடலைக் கடந்து இங்கு வர ஏன் அனுமதித்தாய்?'' என்று கோபத்துடன் கேட்டான் சூரபன்மன்.

''மன்னர் மன்னவா! திருமால், பிரமன், இந்திரன்,இலக்கத்தொன்பது வீரர்கள் ஆகியோருடன் சிவகுமாரர் விண்வழியே சென்றார். எனவே அவர்களை நான் தடுக்க முடியவில்லை. பூத சேனைகள் தான் எனமீது நடந்துசென்றனர். அப்பொழுது கடல் அவர்களது கணுக்கால் வரை கூட எட்டவில்லை. ஆகவே அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாமல் போய்விட்டது. அவர்களை நான் எதிர்த்திருந்தால் முன்பு அகத்தியர் என்னைக் கையால் அள்ளிக் குடித்ததுபோல் செய்திருப்பார்கள்'' என்று நடுங்கிக்கொண்டே கூறினான் வருணன்.

இதற்குள் முருகக் கடவுள் மகேந்திரபுரியை நெருங்கிவிட்டார். இதனைக் கண்ட ஒற்றர்கள் சூரபன்மனிடம் ஓடிவந்தார்கள். ''அரசே! திருமால் பிரமன், இந்திரன் முதலிய தேவர்களுடனும், இலக்கத்தொன்பது வீரர்களுடனும், இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனைகளுடனும் சிவகுமாரன் மகேந்திரபுரியின் வடதிசையில் வந்து பாடி வீடு அமைத்துத் தங்கியிருக்கிறார்'' எனறு கூறினார்கள்.

சூரபன்மன் துடிதுடிப்புடன் ''ஒற்றர்களே! நீங்கள் போய்ப் பானுகோபனை விரைந்து அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டான்.

''உத்தரவு'' என்று கூறப்பட்ட ஒறறர்கள், பானுகோபன் அரண்மனையை அடைந்து சூரனின் ஆணையைத் தெரிவித்தார்கள்.

போருக்குத் துடித்துக் கொண்டிருந்த பானுகோபன் அரியணையை விட்டு அவசரமாக இறங்கினான்; விரைவாகத் தேரில் புறப்பட்டான்.

பானுகோபனின் தேர் சூரபன்மனின் அரண்மனையை அடைந்தது. ''தந்தையே! என்னை அழைத்த காரணம் யாது?'' என்று பானுகோபன் சூரனை வினவினான்.

''மகனே! இலக்கத்தொன்பது வீரர்களுடனும் பூதசேனைகளுடனும் கந்தன் திருச்செந்தூரிலிருந்து நம் நகருக்கு வந்து வடக்கு வாயிலில்பாடி வீடமைத்துக் கொண்டு தங்கியிருக்கிறான். நமது வீர மகேந்திரம் இந்த வீரர்களும் பாலனும் வரக்கூடிய நகரமா? நம்மை எதிர்த்து வந்திருக்கும் பகைவர்களோ மிகச் சிறியவர்கள். நானோ அண்டங்களையெல்லாம் ஆளும் அரசர்க்கரசன். ஆகவே நீ உன்



சேனைகளுடன் சென்று அவர்களை வென்றுவா'' என்று சூரபன்மன் உத்தரவிட்டான்.

''போருக்குப் போ'' என்று சூரபன்மன் கூறிய சொல்லைக் கேட்டதும் பானுகோபனின் தோள்கள் பூரித்தன. ''அப்பா! அந்தச் சிறுவனையும் அவனுடன் வந்திருக்கும் படைகளையும் வென்று வருவது எனக்குப் பெரிய செயல் அன்று. அந்தப் பாலனை எதிர்த்துப் போருக்குச் செல்ல நான் முன்பிருந்தே துடித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது என் சேனைகளுடன் சென்று அந்தப் பாலனை வென்று வருவேன்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டான்.

பானுகோபன் ஆடை ஆபரணங்களைச் சிறப்பாக அணிந்து கொண்டான்; வச்சிர கவசம் அணிந்து அம்பறாத் தூணியும் பாணங்களும் எடுத்துக் கொண்டான்; வாட்படையை மருங்கில் சொருகிக் கொண்டான்; வீரக் கழல் அணிந்துகொண்டான்; நெற்றியில் பட்டங் கட்டிக்கொண்டு தும்பை மாலை அணிந்தான்; பாணங்கள தாக்காமல் இருப்பதற்காக உடும்புத் தோலால் செய்யப்பட்ட உறைகளைத் தரித்துக்கொண்டு, பல்வகை ஆயுதங்கள் ஏந்திச் சதுரங்க சேனைகள் சூழ முப்பதினாயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு தேரில் ஏறிப் போருக்குப் புறப்பட்டான்.

சதுரங்க சேனைகளுடன் பானுகோபன் போருக்குப் புறப்பட்டதைக் கண்ட நாரத முனிவர் ஏமகூடப் பாசறையை அடைந்து முருகக் கடவுளின் திருவடிகளை வணங்கினார். ''சுவாமி! தேவரீர் இங்கு எழுந்தருளியிருப்பதை அறிந்த சூரபன்மன் தங்களோடு போர் செய்ய அவனது குமாரனாகிய பானுகோபனை அனுப்பியிருக்கிறான். பானுகோபன் எண்ணற்ற சேனைகளுடன் போர்க்கோலம் பூண்டு வருகிறான். அவனைத் தேவரீரும் சிவபெருமானுமன்றி வேறு எவரும் எதிர்க்க முடியாது. அவன் திருமாலையும், பிரமனையும், இந்திரனையும் வென்றவன். மாயங்கள் பல கற்றவன். அவ

னுக்கு பிரமா தமது அஸ்திரங்களைக் கொடுத்திருக்கிறார். வருணனின் பாசத்தையும், இயமனின் சூலத்தையும் கவர்ந்தவன் அவன். ஆகவே, தாங்களே அவனைக் கொல்ல வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்.

நாரத முனிவர் கூறியவற்றைக் கேட்ட எம்பெருமான் புன்முறுவல் செய்தார்.

''வீரவாகு''! என்று அழைத்தார்.

வீரவாகுதேவர் வந்து முருகப்பெருமானின் காலில் விழுந்தார்.

நம்முடன் போர் செய்ய சூரபன்மன் தனது மகனாகிய பானுகோபனை அனுப்பி இருக்கிறான். நீ இலக்கம் வீரர்களுடனும் உனது எட்டுத் தம்பிகளுடனும், ஆயிரம் வெள்ளம் பூத சேனைகளுடனும் போய் மகேந்திரபுரியைத் தாக்கிப் பானுகோபனை வென்று வருவாயாக'' என்று ஆணையிட்டார். வீரவாகுதேவர் முருகப் பெருமானை வணங்கி விடைபெற்றுச் சென்றார்.

மேருகிரி போன்ற ஒரு வில்லையும் அம்பறாத் தூணியும் ஏந்தி ஒரு தேரில் ஏறிக் கொண்டார் வீரவாகு. ஆயுதங்கள் நிறைந்த தேர்கள் பல அவரைச் சூழ்ந்து கொண்டன. ஆயிரம் வெள்ளம் பூதங்களும் இலககத்தெட்டு துணைவர்களும் போர்க் கோலம் புனைந்து சூழ்ந்தனர். வீரவாகு தேவரின் தேர்புறப்பட்டு மகேந்திரபுரியின் மதிற்பக்கத்தே வந்தது. அசுரர்கள் பானுகோபனிடம் ஓடி, வீரவாகுதேவர் போருக்கு வந்துள்ள செய்தியைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்ட பானுகோபன், கைகொட்டி ''என்னை எதிர்த்து வந்திருக்கும் வீரர்களை அழிப்பேன்'' என்று ஆரவாரித்துப் போருக்குப் புறப்பட்டான்.

அசுரசேனைகளுக்கும் பூத சேனைகளுக்குமிடையே போர் தொடங்கிற்று. அசுர சேனைகள் அளவற்ற ஆயுதங்களை எறிந்து போர் புரிந்தனர். பூதசேனைகள் மரங்களையும் மலைகளையும் பெயர்த்து வீசி அசுரர்களை மாய்த்தனர். இப்படியாக இரண்டு பககங்களிலும் உள்ள சேனைகள் துவந்த யுத்தம் செய்தன. இருபுறத்திலும் பலர் இறந்ததால் உதிரம் கடல்போலப் பெருகியது. பூத சேனைகள் மிகுந்த ஆத்திரங்கொண்டு அசுர சேனைகளுடன் கடுமையாகப் போர் செய்தன. அசுரர்கள் அத்தாக்குதலைத் தாங்கவொணாது சிதறி ஓடினார்கள். அவர்கள் சிதறி ஓடுவதைக் கண்ட அசுரப் படைத் தலைவனான அனலி தன் கையிலிருந்த வில்லை வளைத்து நாணை மீட்டினான். அந்த ஒலியைக் கேட்டுத் தேவர்களும் அஞ்சினர். அவன் தீக்கணையால் பூத சேனைகளின் தோள்களைத் துளைத்தான். அனலியின் கடும் போரைக் கண்ட பூதசேனைத் தலைவன் சிங்கன், தன் கையிலிருந்த தண்டினால் அனலியின் தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை அடித்துக் கொன்றான். அனலியின தேரில் பாய்ந்து வதைத்து வில்லைப் பிடுங்கி எறிந்தான் சிங்கன். அனலி தன் கையிலிருந்த தண்டினால் சிங்கனின் தலையில் அடித்தான். சிங்கன் அவனைப் பிடித்துச் சுழற்றித் தரையில் அடித்தான். அவ்வளவில் அனலி இறந்தான்.

அசுர சேனைகளின் மற்றோரு தலைவனான சண்டன் சிங்கனுடன் போருக்குவந்தான். இறந்த அனலியின் கையிலிருந்த தண்டைப் பறித்துச் சண்டனின் தேரில் பாய்ந்த சிங்கன், அந்தத் தண்டினால், சண்டனின் தோளைத் தாக்கினான். அந்த நிலையில் சண்டன் தன்னுடைய கைத் தண்டினால் சிங்கனின் மார்பில் அடித்தான். இருவரும் பெருமூச்சுவிட்டு மயங்கித் தேரினின்றும் கீழே விழுந்தார்கள்.

அசுர சேனைகளின் இன்னொரு தலைவனான மாயன் என்பவன் சண்டன் மயங்கி விழுந்ததைக் கண்டான். உடனே தேரில் ஏறி அந்த இடத்துக்கு விரைந்தான். அப்போது, பூதசேனைகளின் தலைவனான நீலன் அவனை எதிர்த்துச் சென்று மார்பை நோக்கித் தண்டத்தை எறிந்தான். உடனே நீலன் மீது ஒரு சூலத்தையெறிந்தான் மாயன். அந்த சூலம்தாக்கியதால் நீலனின் மார்பிலிருந்து உதிரம் பெருக்கெடுத்தோடியது. சிறிது நேரம் மூர்ச்சித்திருந்த நீலன் அறிவு தெளிந்ததும் மாயனின் மார்பில் ஓங்கி அடித்தான். அவனது தோள்களைக் கட்டிப் பிடித்துக் கழுத்தில் கடித்தான்; அவனது உடலில் உள்ள குருதியைக் குடித்தான். மாயன் மாண்டான்.

இதற்குள் போர் செய்து மூர்ச்சித்துத் தேரினின்றும் கீழேவிழுந்த சண்டனும், சிங்கனும் அறிவு தெளிந்து எழுந்தனர். பழையபடி போர் தொடங்கினர். சிங்கன் தண்டத்தினால் சண்டனை அடித்து அவனது தோளை ஒடித்தான். தன்னுடைய ஒடிந்த தோளையே தண்டாக ஏந்திப் போர் செய்தான் சண்டன். இருவருககும் கடுமையாக போர் நடந்தது. இறுதியில் சிங்கன சண்டனைக் கொன்றான்.

சண்டன் இறந்ததைக் கண்டதும் அசுர சேனைத் தலைவர்களில் மற்றொருவனான அசமுகன் ஒரு தேரில் ஏறிச் சிங்கனை நெருங்கினான். அநத இருவருக்குமிடையே மது என்னும் பூத சேனைத் தலைவன் பாய்ந்தான். அசமுகன் மதுவின் மீது பாணங்களை ஏவினான். அந்தப் பாணங்களைச் சிறிதும் பொருட்படுத்தாத மது அருகிலிருந்த ஆலமரம் ஒன்றைப் பெயர்த்து அதனால் பாணங்களைத் தடுத்துக் கொண்டே அசமுகனின் தேரில் புகுந்தான். அப்போது அசமுகன் கையிலிருந்த வில்லும் பாணங்களும் கீழே நழுவி விழுந்தன. அதனைக் கண்ட மது, ''நீ போருக்கு ஏற்ற வீரன் அல்ல'' என்று கூறித் தேரை விட்டு இறங்கிச் சென்றுவிட்டான். அசமுகனுக்குச் சொல்லமுடியாத வெட்கம் ஏற்பட்டது. ஒருவாறாக மனம் தேறிய அவன், மதுவைத் தேடிச் சென்று போருக்கு அழைத்தான். வீரம் இல்லாத உன்னுடன் போர் செய்வது எனக்கு இழுக்காகும்'' என்று மது கூறினான். அசமுகன் விடவில்லை. மதுவின் மேல்பல பிறைமுகக்கணைகளை விடுத்தான். அப்போதும் மது ஆயுதம் எடுக்காமல் அக் கணைகளையெல்லாம் கையால் விலக்கித் தடுத்தான். உடனே, அசமுகன், சூலம், வேல் முதலியவற்றை மதுவின் மீது எறிந்தான. அசமுகனின் தேரை எடுதது்க் கடலில் வீசியெறிந்தான் மது. அசமுகன் தேரிலிருந்து பாய்ந்து மதுவுடன் மற்போருக்கு வந்தான். 'மது ஓங்கி ஓர் உதைகொடுத்தான். அசமுகன ஆகாயத்துக்குப்போய் அங்கிருந்து கீழே விழுந்தான். உடனே எழுந்து மதுவின் மார்பில் இடிமுழக்கம் போன்று அடித்தான். பின்னர் மாயமாக விண்ணில் மறைந்து விஷ்ணுவின் சக்ராயுதத்தை மது மீது விடுத்தான். சக்ராயுதம் தரும ஸ்வரூபம். அது ஒரு காலும் அதரும போர்புரியாது. நிராயுதனாயிருந்த மதுவைச் சக்கரைப்படை ஒன்றும் செய்யவில்லை. அது திருப்பிச் சென்று அசமுகனின் தலையையே அறுத்தது. அசமுகன் இறந்தான்.

[தொடரும்]



# ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ..?

[2]

கம்பன் கவிநயமணி வே. தியாகராாசன்


''காசியைக் குறித்துச் செல்லும் கால்களே
கால்களாகும்
காசியை வழுத்தும் நாவே நாவெனக் கழறலாமால்
காசியின் கதைகள் கேட்கும் செவிகளே
செவிகளாகும்
காசியை இனிது காணும் கண்களே கண்களாகும்''.

என்ற பெருமையுடைய காசிமாநகரில ஒரு சமயம் துர்வாசர் சிவபூசை செய்தார். அவ்வமயம் இறைவனது திருமுடியிலிருந்து ஒரு மலர் கீழே விழ, அதைத் தன் கையால் ஏந்திக் கண்களில் ஒற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் தேவருலகம் நோக்கி வந்தார். தேவருலகத்தில் தேவேந்திரன் ஐராவதம் என்ற வெள்ளை யானை மீது ஏறி தேவர்கள் புடைசூழப் பவனி வந்து கொண்டிருந்தான். தேவர்கள் தமது அரசனுக்கு விதவிதமான காணிக்கைகள் கொடுத்து வணங்கிச் சென்றனர். அது கண்டு மகிழ்ந்த துர்வாசர் தேவேந்திரனுக்கு ஆசி கூறி, சிவப்பிரசாதமான தன் கையிலிருந்த மலரைநீட்ட அதை மரியாதையில்லாது யானையை அடக்கும் அங்குசம் என்ற ஆயுதத்தினால் வாங்கி, யானையின் மத்தகத்தின் மீது வைத்தான். அந்த யானை தன்மீது வைக்கப்பட்ட மலரை தும்பிக் கையால் எடுத்துக் கீழே போட்டுத் தன் கால்களால் தேய்த்துவிட்டது. கடுமையான சீற்றங்கொண்ட துர்வாசர் ''உத்தம சிவனடியார்கள் வேண்டாமென்று அருவருத்து நீத்த செல்வம் உன்னிடமிருப்பதால் கர்வம் கொண்டாய். தேவர்களின் காணிக்கையையே மதித்தாய். ஈறிலாத பெருமையுடைய ஈசன் பிரசாதத்தை அலட்சியமாக வாங்கி யானை மிதிக்கும்படி செய்தாய். திருமால் காக்கும் தெய்வமாக விளங்குவதும், நான்முகன் படைப்புத் தொழில் செய்வதும், தேவர்கள் தொழ வாழும் உன் பெருமையும், சிவபூசனை செய்ததனால் கிடைத்த பேறுகள் என்பதனை மறந்தாய்.

''வண்டுளருந் தண்டுழாய் மாயோன் இறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்
அண்டர் தொழவாழ் உன் இறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென்று உணர்ந்திலை
யால்''.

''தேவேந்திர! சிவாபாரதம் செய்த உன் தலை மதுரைப் பாண்டியன் ஒருவனுடைய வளை என்ற ஆயுதத்தால் சிதறட்டும். உன் ஐராவதம் என்னும் வெள்ளை யானையும் கருநிறமுடைய காட்டு யானையாகட்டும்' எனச் சபித்தார். அது கண்டு நடுங்கிய தேவர்கள் துர்வாசரை வணங்கி தேவேந்திரனுக்கு இட்ட சாபத்தை மாற்று மன்னிக்குமாறு மன்றாடி வேண்டினர். கோபம் தணிந்த துர்வாசர் ''சிவப்பிரசாதத்தை நிந்தித்த பாவம் எந்தப் பரிகாரத்தாலும் நீங்காது. தேவேந்திரன் தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு போகட்டும். ஐராவதம் நூறு வருடங்கள் கழித்துத் தனது பழைய உருவத்தை அடையட்டும்'' என்பதாக மறு சாபம் கொடுத்தார். ஐராவதம் கறுப்பு யானையாக மாறி பூவுலகத்திற்கு வந்து மற்ற யானைகளுடன் காடுகளில் திரிந்து, நூறு வருடங்கள் கழித்து, கடம்பவனமடைந்து பொற்றாமரையில் குளிக்க தன் பழைய உருவத்தையடைந்து, அங்கிருந்த சிவலிங்கப் பெருமானைப் பூசித்தது. தும்பிக்கையால் நீராட்டிப் பூசனை புரிந்த யானையைக் கண்ட இறைவன் ''உனக்கு என்ன வேண்டும்?'' எனக் கேட்க, ஐராவதம் ''இறைவனே!'' உன் விமானத்தைச் சுமக்கும்அட்டதிக் கஜங்களான எட்டு யானைகளுடன் ஒன்பதாவதாக நானும் என் முதுகில் சுமக்க வேண்டும் என்பதே என் ஆசை'' எனக்கூற, இறைவன் ''தேவேந்திரன் என் அன்பன், அவனை நீ சுமப்பதே எனக்கு மகிழ்வு'' எனக்கூற, இறைவனது ஆணைப்படி யானை தேவருலகம் சேர்ந்து தேவராசனுக்கே சேவை செய்யலாயிற்று.

தேவேந்திரனுடைய பழியைத் தீர்த்து யானைக்கு அருள் செய்த பெருமான் கடம்பவனத்திலேயே இருந்தனர். அக்கடம்பவனத்தின் கீழ்த் திசையில் இருந்த மணவூர் என்ற ஊரைக் குல



சேகர பாண்டியன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவ்வூரிலிருந்து தனஞ்சயன் என்ற வணிகன் ஒருவன் புறப்பட்டு மேற்குத் திசையில் உள்ள ஒரு ஊருக்குச் சென்று வியாபாரம் செய்து மணவூர் திரும்பி வரும்போது கடம்பவனம் அடைந்தபோது இரவு வந்துவிட்டதால் கடம்பவனத்திலேயே தங்கினான். முன்பிறப்பிற் செய்த நல்வினையால் அங்கிருந்த சிவபெருமானைக் கண்டு வணங்கினான். அன்று சோமவாரமாதலால் தேவர்கள் கடம்பவனம் வந்து சிவராத்திரி நாள்களில் செய்வதுபோல நான்கு ஜாமங்களிலும் அர்ச்சனை செய்து வணங்கினர். இது கண்டு களிப்பும் விம்மிதமும் அடைந்த வணிகன், பொழுது விடிந்ததும் மணவூர் திரும்பிக் குலசேகர பாண்டியனிடம் நிகழ்ந்தவற்றைக் கூறினான். அன்றிரவு பாண்டியனது கனவில் சித்தர் வேடத்தில் எழுந்தருளிய சிவபெருமான் கடம்பவனத்தை அழித்து ஒரு அழகிய நகரம் கட்டுமாறு கூறினார். மறுநாள் பொழுது விடிந்து எழுந்த பாண்டியன் கடம்பவனத்தை அடைந்தான். சிவலிங்கப்பெருமானைக் கண்டு மகிழ்ந்தான். ''மண்ணாசை, தேவ பதவிகளில் ஆசை முதலியவற்றை விட்டவர்க்கே கருணை புரியும் பெருமானே! துன்பத்தில் உழலும் எம்போன்றவர்க்கும் உமது கருணை கிட்டுவதா? பிரம விஷ்ணுக்களுக்கும் கிடைக்காத உன் கருணை எம்குடி முழுவதையும் ஆட்கொள்ளவேண்டுமென்ற கருணையினால் எமது எல்லையில் எழுந்தருளினீரோ?.

''சரண மங்கையோர் பங்குறை சங்கர சரணம்!
சரண மங்கலமாகிய தனிமுதல் சரணம்!
சரண மந்திர வடிவமாம் சதாசிவ சரணம்!
சரணம் உம்பர்கள் நாயக பசுபதி சரணம்''

என உருகித் துதித்து வணங்கினான். அப்போது அரசனது ஆட்கள் கடம்பவனத்திலுள்ள மரங்களை அழித்து வெளிசெய்து நகரமாக்கத் தொடங்கினர். இருட்டு நிரம்பிய வனம் மரங்கள் எடுக்கப்பட்ட பின் தத்துவமறிந்த ஞானிகளின் மனம்போல் பிரகாசித்தது. பற்றுதலற்ற ஞானிகளின் பிறப்பை இறையருள் வேரோடு களைந்து விடுவதுபோல் பல மரங்கள் வேரோடு களையப்பட்டன. எதிர்பாரத நிலையில், பாண்டியன் எதிரில் கனவிலே வந்த அதே சித்தர் வேடத்துடன் இறைவன் எழுந்தருளி, ஆகமம் சிற்ப நூல்களில் கூறப்பட்டபடி கோபுரம், ஆலயம் முதலியவற்றை நிர்மாணம் செய்து பின் ஆலயத்தைச் சுற்றிநகரத்தை அமைக்குமாறுகூறி மறைந்தார். பாண்டியனும் அவ்வாறே செய்தான். இறைவன் தனது சடையிலிருந்த சந்திரகலையிலிருந்து சிறிது அமுதத் துளியைச் சிந்த, அது, தன்னயடைந்தவரைத் தன்மயமாக்கும் சிவபெருமானைப் போல் நகரம் முழுவதும் பரவி மதுரமாக்கியதால் அவ்வூருக்கு மதுராபுரி எனப் பெயரிட்டனர்.

''பொன்மயமான சடைமதிக் கலையின்
புத்துமுது உகுத்தனர் அதுபோய்ச்
சின்மயமான தம்மடி யடைந்தார்ச்
சிவமயமாக்கிய செயல்போற்
தன்மய மாக்கி யந்நகர் முழுதும்
சாந்தி செய்தது; அது மதுரா
நன்மயமான் தன்மையாய் மதுரா
நக்ரென உரைத்தனர் நாமம்''.

நகருக்குக் கீழ்த் திசையில் ஐயனாரையும் தென்திசைக்குச் சப்தமாதர்களையும், மேல்திசைக்குச் திருமாலையும், வடதிசைக்கு காளியையும் காவல் தெய்வங்களாக்கிக் கோயில் கட்டி அக்கோயிலைச் சுற்றி வேதியர் வீதி, வேந்தர் வீதி, வைசியர் வீதி, வேளாளர் வீதி முதலானவற்றை அமைத்து மதுராபுரியை அழகிய நகராமாக்கிப் பாண்டிய தேசத்திற்குத் தலை நகரமாக்கிக் கொண்டு அரசாட்சி செய்து வாழ்ந்தான்.

—(தொடரும்)



# ஆதியோடு அந்தம் இல்லாத "பராபரம்"

திருமந்திரச் செம்மல் டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.

எல்லாம்வல்ல இறைவனைப் பற்றிய அறிவைப் பேரறிவு என்று சொல்லுகிறோம். மற்றது சிற்றறிவாகும். பரஞானம், அபரஞானம் என்றும் கூறுவதுண்டு. இறைவன் மெய்ஞ்ஞானத்திற்கு இருப்பிடம். ''மெய்ஞ்ஞானமாகி, மிளிர்கின்ற மெய்ச்சுடரே'' என்பார் மணிவாசகப் பெருமான். ''அஞ்ஞானம்தன்னை அகல்விக்கும் நல்அறிவே'' என்றும் கூறுவார். இறைவன் உண்மை ஞானமாக பிரகாசிக்கின்ற சத்தியமான சுடர். அந்த ஞானமே எங்கும், பரவியும் ஊடுருவியும் நிற்கின்றது. அந்த அறிவே நம்முடைய உள்ளத்தின் அறியாமையைப் போக்குகின்றது. அறியாமை நீங்கிய உயிர் இறைவன் அருளால் மெய்ஞ்ஞானத்தைப் பெற்றதாகிறது. மெய்ஞ்ஞானம் பெற்ற சான்றோர்களின் தன்மை வேறு. சிற்றறிவின் இயக்கத்திலே ஈடுபட்டுள்ள உயிர்களாகிய நம்முடைய தன்மையும் வேறு. நாம் விஞ்ஞானத்தில் கிடக்கின்றோம். விஞ்ஞானமாவது கருவி கரணங்களைப் பயன்படுத்தி பிரபஞ்சத்தினைப் பற்றிய அறிவினைப் பெறுவதாகும். பல கோடி அண்டங்கள் எவ்வாறு தோன்றுகின்றன, வளர்கின்றன, மறைகின்றன என்பது பற்றிய ஆய்வினை நமது கருவி, கரணங்கள் பல விதமான இயந்திரங்களைப் பயன்படுத்தி செய்து நமக்கு அறிவினைச் சேர்த்து வருகின்றன. இந்த அறிவு விஞ்ஞான அறிவாகும். விஞ்ஞான அறிவினைப் பயன்படுத்தி இன்று மனிதன் புரிந்துள்ள சாதனைகள் பிரமிக்கத்தக்கவை. ஆயினும் விஞ்ஞான அறிவு மெய்ஞ்ஞான அறிவிலிருந்து வேறுபட்டது. மெய்ஞ்ஞான அறிவு இறைவனுடைய பேரறிவையும், பேராற்றலையும் பற்றியது. விஞ்ஞான அறிவு கருவி, கரணங்களோடு தொடர்புடைய காரணத்தால் அவற்றின் எல்லைக்குள்ளேயேதான் இயங்கவல்லது. மெய்ஞ்ஞான அறிவு கருவி, கரணங்களின் அறிவுக்கு அப்பாற்பட்டது. மெய்ஞ்ஞானஅறிவு மனித உள்ளத்தில் ஒரு முழுமையான அமைதியான, ஐயத்திற்கு இடமில்லாத உணர்வினை உண்டாக்கி பேரின்பத்தைத்தருகிறது. கருவி,கரணங்கள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இயங்குவதால் அவை அளிக்கும் அறிவு முழுமையாகாது.

முழுமையான அனுபவத்தை பெற்ற மெய்ஞ்ஞானிகள் எதிலும், எங்கும், எப்போதும் முழுமையைப் பார்க்கின்றனர். அவர்களே அநத முழுமைத் தன்மையையும் பெறுகின்றனர். சிவத்தை பராபரமாக அனுபவித்த திருமூலர் போன்ற சிவசித்தர்கள், அறியாமை நீங்கப்பெற்ற காரணத்தினால், அங்கு இங்கு என்னாது எங்குமாய் இறை உணர்வில் மூழ்கி நிற்பர். அநத நிலையில் அவர்களுடைய செயல்களெல்லாம் சிவன் செயலாகின்றன. அவர்கள் கால உணர்வை கடந்தவர்களாகிறார்கள். காலத்திற்கு அப்பாற்பட்ட மெய்ஞ்ஞானத்தைப் பெற்றமையால் உண்மையில் காலத்தின் பாகுபாட்டால் மறைக்கப்படாமல், முழுமையான நிறைவோடு அனுபவிக்கின்றனர். சிவனுடைய அறிவில், ஆற்றலில் செயலற்று நிற்கின்றனர்.

''இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி;
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி;
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே!''

(திருமந்திரம்...126)

இன்று விஞ்ஞானம் பிரபஞ்சத்தை நோக்குகின்றது. பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பிரபஞ்சம், அணுவிற்கும் நுட்பமான நிலையிலிருந்து உருவாகி, காலப்போக்கில் வெப்பம் குறைந்து பல அண்டங்களாக வடிவெடுத்திருக்க வேண்டுமென்று விஞ்ஞானத்தின் ஆய்வுகளால அனுமானிக்க இடமுண்டு. சூரியன், சந்திரன் மற்றும் பல கோடி அண்டங்கள், கோளங்கள் போன்றவையெலலாம் ஏறக்குறைய ஒரே மாதிரியான மூலப் பொருள்களின் அணுக்களிலிருந்தே உற்பத்தியாகின்றன எனவும், அநத அணுக்களே இன்று பூவுலகில் உயிர் பெற்று வாழும் பல்வேறு உயிரினங்களின் உடல்களிலும் காணப்படுகின்றன என்பதையும் நாம் அறிவோம். இந்த அறிவினை விஞ்ஞானத்தின் மகத்தான சாதனை என்று நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், இந்த அறிவு நிறைவு பெற்ற அறிவு என்று சொல்ல இயலவில்லையே!.

நம்மைப் போன்ற உயிர்கள் பிறப்பதைப் பார்க்கின்றோம். இறப்பதைப் பார்க்கின்றோம்;

## ஒன்றே குலம்
## ஒருவனே தேவன்

—திருமூலர்

இருப்பதைப் பா ⁴க்கின்றோ ம. அதுபோலவே விஞ்ஞான ஆராய்ச்சிகள் வானவெளியில் பலகோடி அண்டங்கள் பிறந்து, இருந்து, மறைந்து வருவதை நமக்கு நிரூபிக்கின்றன. இதற்கான காரண காரியங்களை விஞ்ஞானம் பௌதிக இரசாயன ரீதியாக ஆய்வு செய்கின்றதே தவிர ஆய்வின் அடிப்படையை அளவையை மாற்ற தயாராக இல்லை. மாற்றுவதும் அதன் நோக்கமில்லை.

விஞ்ஞானம் பருப்பொருட்களை நோக்கி அவற்றைப் பாகுபடுத்தி அவற்றின் உட்பிரிவுகளை ஆராய்ச்சி செய்வதன் மூலமாக பொருட்கவின் தன்மையை அறிய முற்படுகிறது. அவ்வாறு செய்யும் பொழுதும்பொருட்களை பொருட்களாகவே பார்க்க விரும்புகிறது. பொருட்களுக்கு அப்பாற்பட்ட தன்மையை இப்பொழுதுள்ள விஞ்ஞானத்திற்கு தகுந்தவாறு ஆய்வு செய்ய அளவுகோல்களோ சாதனங்களோ இல்லாத காரணத்தினால் விஞ்ஞானம் மேலும் ஆய்வு செய்ய முற்படுவதில்லை. ஆகவேதான் மெய்ஞ்ஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள இடைவெளி மிகப்பெரியது. விஞ்ஞான சாதனங்கள் மூலமாக இறைவனை அடைய இயலாது. விஞ்ஞானத்திற்கு அந்த நோக்கமும் இல்லை. இறை அனுபவத்தை பெற மெய்ஞ்ஞானிகள் பின்தொடரும் வழிகளும் வேறு.

சிவயோகியர்கள் முற்றும் உணர்ந்த நிலையில் சிவபரம்பொருளோடு ஒனறி இருந்து அவனறிவு, தனதறிவாக பெற்ற அனுபவத்தில் பிரபஞ்சத்தின் படைப்பு, சங்காரம் போன்றவற்றின் அறிவை உள்ளுணர்வாகப் பெறுகிறார்கள். இந்த அறிவு தூலத்திலிருந்து சூக்குமத்திற்கு பரவுகின்றது. காணாத ஒன்றிலிருந்து காணப்படும் பலவற்றை இந்த அறிவு தன்னுள் அடக்கிக் கொள்கிறது. காரணமின்றி காரியமில்லை என்கிற அனுபவம் இந்த அறிவுக்கு அடிப்படையாகிறது. பிரபஞ்ச தோற்ற ஒடுக்கங்களுக்கு இறைவனே முதல்வனாவான் என்பதே அந்தப் பேரறிவாகும். ''எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்'' என்பது சிவஞான சித்தியார். ''மூத்தானே, மூவாத முதலானே!'' என்பது திருவாசகம்.

படைத்தல், காத்தல், மறைத்தல், ஒடுக்குதல் போன்ற பணிகள் ஓயாமல் நடந்துகொண்டே இருக்கின்றன. இவையெல்லாம் ஈசனின்றி நடைபெறாது. மெய்ஞ்ஞானிகள் இவற்றை இறைவனின் விளையாட்டாகக் காண்கிறார்கள். காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடி என்று திருவாசகம் பேசுகிறது. ''அய்யா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்'' என்பதும திருவாசக வாக்காகும். இது என்ன விளையாட்டு! ஈசனுக்கு இந்த விளையாடல் தேவைதானா என்று நினைக்கலாம். சற்று யோசித்தால் உண்மை விளங்கும். ஆக்கமும், ஒடுக்கமும் இறைவனுக்கு கடினமானவை அல்ல. அவற்றை விளையாட்டாகச் செய்கிறான் என்றால் அத்துணை எளிதாகச் செய்கின்றான் என்பதே பொருள். இந்த விளையாட்டு நாடகம் இறைவனின் ஞான நாடகமாகும்; விண்ணின்று இழிந்து, வினைக்கிடாய் மெய்கண்டு உயிர்கள் அனைத்தும் தம் பேரருளாலும், பெரும் கருணையாலும் உய்வடைய வேண்டும் என்பதே இந்தச் இறு விளையாட்டின் நோக்கமாகும். இந்த விளையாட்டினால் பிரபஞ்சத்தையும், ஆகாயத்தையும், பூமியையும் உண்டாக்கி, காப்பாற்றி உயிர்களை அவைகளோடு இணைத்து, உயிர்களுக்கு வேண்டிய அனுபவத்தை அருளித் தந்து காலப்போக்கில் அவை இத்தமலம் நீக்கி சிவமாம் தன்மையைப் பெறச் செய்வது இந்த விளையாட்டின் நோக்கமாகும். இந்த விளையாட்டை மேற்கொள்வது சிவப்பரம்பொருளாகும். இதைச் செய்வது பரம்பொருளின் அருள்கூறாகிய சக்தியாகும். இந்த விளையாடல் உயிர்கட்கு எண்ணிலா பயன்களை விளைவிக்கும். துன்பம் விளைவிப்பதற்காக என்று கருதக்கூடாது. உயிர்கள் முடிவான உண்மையாகிய வீட்டுப்பேற்றினை அடையச் செய்வதே பரம்பொருளினுடைய திருவுளமாகும். இதுவே இறைவனுடைய படைப்பின் முடிவான முடிவுமாகும்.

''ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்;
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்;
பருவங்கள் தோறும் பயன்பல வான;
திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே''.

(திருமந்திரம்...393)

''சொன்னஇத் தொழில்கள் என்ன காரணம்
தோற்ற என்னில்,
முன்னவன் விளையாட்டு என்று மொழிதலும்
ஆம்; உயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவும், அருளால்முன்னே
துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதும்,
சொல்ல லாமே''

(சிவஞான சித்தியார்....56)

''உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையான்''

என வரும் கம்பர் வாக்கும் ஈண்டு நினைவு கூறலாம்.

இறைவனுடைய விளையாட்டு தொடங்கும் வரை முழுமுதற் பொருளாகிய கடவுள் ஒன்றேயாய் யாதொரு செயலையும் மேற்கொள்ளாது இயல்பான நிலையில் நிற்கும். அப்போது பரம்பொருள் ஒன்றைத் தொடங்குவது அல்லது முடிப்பது என்கினற பணியில் ஈடுபடாத காரணத்தால் அந்த நிலையை ஆதியும் அந்தமும் இல்லாத நிலை என்று மெய்ஞ்ஞானிகள் கூறுவர். ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியை'' என்று இந்த நிலையை மணிவாசகப் பெருமான் குறிப்பிடுவார். ''ஆக்கம் அளவு இறுதி இல்லாய்'' என்று திருவாசகம் கூறுகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத கடவுள் பொருள் ஒன்றே சங்கார காலத்தில் பிரபஞ்சங்கள் முழுவதையும் தத்தம் கரணங்களில் ஒடுக்கி, அந்தக் கரணங்களை மாயையிலே ஒடுக்கி மாயையை சக்தியிலே ஒடுக்கி, சக்தியை தன்னுளே மறைத்து, தத்துவங்களுக்கு இருப்பிடமாக அமைந்து மீண்டும் உயிர்கள் ஒடுங்கிய நிலையிலிருந்து வெளிப்பட்டு தத்தம் வினைகளைப் போக்கு

வதற்கான தனு, கரண, புவன போகங்களை உருவாக்க திருவுளம் கொள்கிறான். இந்த நிலை அழகிய தாமரை மலர் ஒன்று இரவிலே குவிந்து நிற்கின்ற ஒன்றைப் போலாகும். சர்வ சங்கார காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் குவிந்து கிடக்கின்றது. அதைச் செய்வது இறைவனே. பகற்பொழுதில் குவிந்த தாமரை மலர் விரிகின்றது. தாமரை விரியும் பொழுது அதன் இதழ்கள் விரிகின்றன. மலர் முழுவதிலும் அதன் மணம் விரிகின்றது. தாமரையின் இயல்பான நிறமும் குணங்களும வெளிப்படுகின்றன. தாமரை மலரைப் போல இறைவன் திருவுளம் கொண்டபோது பிரபஞ்சங்களும் விரியத தொடங்குகின்றன. இறைவனை நோக்கி 'விரித்தனை குவித்தனை'' என்று ஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றார். சங்கார காலத்தில் இறைவன் எல்லா உயிர்களையும் தன்னுள் ஒடுக்கிக் கொள்கின்றான். பின்னர் உயிர்களுக்கு சிறிது ஆற்றல் அளித்து பிரபஞ்ச இயக்கத்தில் அவற்றை இணைத்துவிடுகின்றான். இதனை ஞானசம்பந்தப் பெருமான் ''விழுங்குயிர் உமிழ்ந்தனை'' என்பார். சிவபெருமான் உலகம் முழுதும் உடையான். பிரபஞ்ச இயக்கத்திற்கு காரணமானவன. பல்வேறு தலைவர்கள் தத்தம் நிலையில் நின்று தொழில் செய்வதற்கான அதிகாரத்தையும், ஆற்றலையும் அளித்தவன் அவனே. இதனைத் திருமூலர்

''உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனாகி
அண்டத் தமரர் தலைவனாம் ஆதியும்
கண்டச் சதுமுகக் காரணன் தன்னொடும்
பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே''

(திருமந்திரம்...386)

என்று கூறுகிறார்.

ஒடுக்க நிலையில் உயிர்கள் செயல்படாது தங்குகின்றன. அவற்றிற்கு இன்ப துன்பங்கள் கிடையாது. இயல்பாய் உள்ள ஆணவ மலம் அவற்றுடன் தொடர்ந்து நிற்கின்றது. ஆணவ மலத்தினால் ஏற்படும அறியாமை நீங்கினால்தான் உயிர்கள் நிலையான இன்பத்தைப் பெறமுடியும். இது நடக்க வேண்டுமென்றால் மீண்டும் உயிர்கள் வினைக்கடலின் பங்கினைப் பெற்று மாயை, கன்மங்கள் அடிப்படையில் தத்தம் தொழில்களைத் தொடங்க வேண்டும். ஆணவ மலம் குறைந்து உயிர்கள் உயர்ந்து வர வேண்டுமெனில் பிரபஞ்ச இயக்கம் இறைவனுடைய திருவருளால் நடைபெறவேண்டும் இறைவன் மீண்டும் படைப்புத் தொழிலில் ஈடுபட வேண்டும். எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டு வியாபித்துள்ள அந்தமும் ஆதியும் ஆகிய பராபரன் எனும் பரம்பொருள் தானே பூமியின கீழ் கிடக்கும் கிழங்கு போல முதல் காரணமாக நின்று மாயையும் அதனுடைய காரியங்களையும் தோற்றுவித்து, ஐந்தொழில்கள் நடப்பதற்கு பொறுப்பாகவும் நிற்கின்றான். இவையெல்லாம் கிழங்கிலிருந்து தோனறும் முளை போல பரம் பொருளின் திருவுளமாகிய படைப்பு நெறியின் தோற்றமாக வெளிப்படுகிறது.

''அந்தமும் ஆதியு மாகிப் பராபரன்
வந்த வியாபி யெனலாய வந்நெறி
கந்தம தாகிய காரண காரியந்
தந்தையுங் கருமமுந் தான்செய்யும் வீயமே''

(திருமநதிரம்...1927)

பராபரம் இயற்கை நிலையில் ஞானத் தலைவனாக நிற்கின்றது. பராபரத்துடன் பொருந்தி இருக்கும் பராபரையாகிய சத்தியின் இயற்கை

# ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும்

—திருமூலர்

நிலையும் ஞானமேயாகும். இதனை ''போதமதாகப் புணரும் பராபரை'' என்று திருமூலா விளக்குகின்றார். சிவஞானசித்தி ''சத்தியின் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்'' என்றது. இவ்வாறு இயற்கை நிலையில் உள்ள பராபரம் உயிர்கள உய்விக்க வேண்டும் என்கிற எண்ணத்தால் பிரபஞ்சத்தை உண்டாக்க நினைக்கும். பராபரத்துடன் இயல்பாக கூடியிருக்கும பராபரையும் இந்த விருப்பமாத்திரத்தில் பிரபஞ்சத்தைத் துவக்கும் ஞானமாகவும், ஆற்றலாகவும் தோன்றி நிற்கும். இநத நிலையில் இறைவன் அளவிலா ஞானத்தையும ஆற்றலையும தன்னிடம் கொண்டுள்ளான். பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்க இவற்றுள் ஒரு சிறிய பகுதியே போதும். பராபரம் இதைச் செய்ய அடுத்த கட்டமாக ஆதி சிவனாக நின்று செயல்படும் காலத்தில் அவனுடைய ஆற்றல் ஆதி சக்தி மூலமாக வெளிப்படுகின்றது. இந்த நிலையிலும் ஆதி சக்தி ஞானமாத்திரமாய் நிற்பாள். இதனை திருமூலர் ''சோதி அதனில் பரம் தோன்ற தோன்றுமாம் தீதில் பரை'' என்பார.

''ஆதியோ டந்தம் இலாத பராபரம்
போதம தாகப் புணரும் பராபரை;
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாம்
தீதில் பரை; அதன் பால் திகழ் நாதமே''.

(திருமந்திரம்..378)

சிவமும் சக்தியும் இன்னமும் ஞான நிலையிலேயே இருக்கும். விருப்ப நிலை மேலோங்க படைப்பிற்குத் தேவையான இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியாசக்தி என்கின்ற மூன்று சக்திகளும் சிவசக்தியிடத்திலிருந்து தத்தம் தொழில்களை புரிய ஆரம்பிக்கும். அதன் விளைவாக நாதமும் விந்துவும் தோன்றுகின்றன. நாதனாக நிற்கும் சிவம் எழுத்தோசையை சிறப்பாகத் தோற்றுவிக்க காரணமாவான். நாதமும் விந்துவும இச்சா, ஞான, கிரியா சக்திகள் மூலமாக சிவமாகவும், சக்தியாகவும் தோன்றி நிற்பர். ஞானமும் ஆற்றலும, படைப்புத் தொழிலில் சேர்ந்தே செல்கின்றன. ஒன்று இன்றி மற்றது இல்லை. பிரபஞ்சம் செயல்படுவதற்காக சிவம் என்றும், சக்தி என்றும் வேறு வேறாகச் சொல்லப்பட்டாலும் உண்மையில் அவை இரண்டும் ஒன்றியே நிற்கும், தனித்து நிற்பதில்லை. இதையே திருமூலர்,

''இல்லது சக்தி இடந்தனில் உண்டாகிக்
கல்லொளி போலக் கலந்துள் ளிருந்திடும்''

(திருமந்திரம்...380)

என்பார்.

இவ்வாறு கற்பனைக்கு எட்டாது நின்ற பராபரத்துடன் தொடர்ந்து நின்ற நிலையில் ஞானமயமான சக்தி நாதமாய், பின்னர் விந்துவாய் தோன்றியும், பின்னர் அச்சிவத்தோடு கூடி சதாசிவம் என்கிற நிலையிலும் நிற்பாள். சதாசிவத்திட

மிருந்து மகேசுரர், உருத்திரர், மால், அயன் என்பவர்கள் முறையாகத் தோன்றுவர். இந்த ஐவர்கள் முறையே நிலம், நீர், தீ, காற்று, வானம்ஆகிய பூதங்களுக்குத் தலைவராவார். சதாசிவம் ஆகிய ஐவர்களுக்கும் உரிய சக்திகள் உண்டு. அவை முறையே மனோன்மணி, மகேசுவரி, உமை, திருமகள், வாணி எனப்படுவர். இவையெல்லாம் சிவம் தானே மேற்கொள்ளும் பல நிலைகளாகும்.

''தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்ப்
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச சத்திஓர் சார்த்துமா னாமே''.

(திருமந்திரம்...381)

இந்தப் பிரபஞ்சத்தைப் படைப்பவர்கள் ஒருவனாகிய **சிவனும் ஒருத்தியுமாகிய சக்தியுமாவர். அவர்களுக்கு** சதாசிவன், மகேசுவரன், உருத்திரன் மால், **அயன் ஆகிய** புத்திரர்கள் **ஐவர். அவர்களைக் கொண்டே** சிவன் படைப்பு முதலிய தொழிகளைச் செய்விப்பன். **அத்தகைய** தொழில்களைப் **புரியும்** ஐவருமே மிகுந்த **புண்ணியம்** பெற்றவர்கள்.

'புவனம் படைப்பார் ஒருவன், ஒருத்தி;
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்,
புவனம் படைப்பானும் பூமிசை யானாய்ப்
புவனம் படைப்பான் அப் புண்ணியத்தானே'

(திருமந்திரம்...383)

இதுவரை நாம் கண்டது ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் தனது ஞானத்தாலும் ஆற்றலாலும் பல நிலைகளில் நின்று படைப்பு முதலிய தொழில்கள் நடைபெறுவதற்கு ஏற்ப கிரியா, ஞான, இச்சா சக்திகளை உண்டுபண்ணி, அவற்றின் சேர்க்கைகளை வெவ்வேறாகச் செய்து வெகு நுட்பமான தத்துவ நிலையிலிருந்து படிப்படியாக ஐந்து பூதங்களைத் தோற்றுவித்து, அந்த பூதங்களுக்குக் காரணமாக தன்மாத்திரைகளைத் தோற்றுவித்தும், பின்னர் உலகம், உயிர் ஆகியவற்றைப் பிணைத்து உயிர்களுக்கு வினைபோக்கும் தொழிலுக்கான எல்லாவிதமான கருவி, கரணங்களையும் அருளித் தருகின்றான். இந்தச் செயலெல்லாம் அருவ நிலையிலும், அருஉருவ நிலையிலும், உருவ நிலையிலும் நடைபெறுகின்றன.

உலகப் படைப்பு தொடங்குகின்றது. அண்டங்களின் சிருட்டியும் தொடங்குகின்றது. இதற்கெல்லாம் காரணகர்த்தா ஒருவனே. எல்லா உலகங்களையும் படைத்து, காத்து, அழிப்பவனும், அறிவுப் பொருள்கள், அறிவில்லாப் பொருள்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருப்பவனும் முழுமுதற்கடவுளாகிய ஒருவனே என்று விளங்கும்.

"ஒருவனு மேஉல கேழும் படைத்தான்;
ஒருவனு மே உல கேழும் அளித்தான்;
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்;
ஒருவனு மேஉல கோடுயிர் தானே".

(திருமந்திரம்...401)

படைப்புத் தொழில் தத்துவங்கள் விரிதல் மூலமாக நடைபெறுகிறது. பலகோடி அண்டங்களும், பல கோடி பிண்டங்களும் பரசிவம் உருவாக்கிய தத்துவக் கட்டங்களின் சேர்க்கையே ஆகும். தத்துவங்களை உருவாக்கிய பரம்பொருள், மேற்படி தத்துவங்களோடு உயிர்கள் பொருந்தி, வினைப் பயன்களை நுகர்ந்து அறிவையும், அறியாமையும்

## அன்பே சிவம்

**—திருமூலர்**

பெருக்கி, ஆணவ மல இருளில் வெகுகாலம் முழ்கியிருந்து பினனர் அருள்பெற்று, ஒளிபெற்று, வீடுதலை பெறவேண்டும் எனபதே இறைவனின் திருவுளமாகும். அந்தப் பரஞ்சுடர் தத்துவங்கள் நீங்கிய நிலையில் அனபுடைய அடியார்கள் உள்ளத்தில் ஒளிவீசி நிற்கின்றது. அதை அனுபவித்த அனைவரும் உய்வு பெற்றவர்கள்.

''விண் ஆகி, நிலன் ஆகி, விசும்பும் ஆகி,
வேலை சூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண் ஆகி, எழுத்துஆகி, இயல்பும் ஆகி,
ஏழ்உலகும் தொழுது ஏத்திக் காண நின்ற
கண் ஆகி, மணிஆகி, காட்சிஆகி,
காதலித்து அங்கு அடியார்கள பரவ நின்ற
பண் ஆகி, இன்அமுதுஆம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டு அடியேன் உய்ந்தஆறே'

(திருநாவுக்கரசர் தேவாரம்)

**மெய்ஞ்ஞானம்** இறைவனின் படைபபில் ஓர் நோக்கத்தைக் காண்கின்றது. விஞ்ஞான அறிவு ஒரு பொருளைப் பற்றிய அறிவினை வளர்த்துக் கொண்டே போகவேண்டும் என்கிற அடிப்படையில் இயங்குகின்றது. மெய்ஞ்ஞானத்தின் அறிவு ஓர் முடிவான முடிவாகும். விஞ்ஞானத்தின் அறிவு வளர்ந்துகொண்டு போவதைப் பார்க்கின்றோம். ஆனால் அதனுடைய எல்லையை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. விஞ்ஞானம் ஒரு திசையிலிருந்து மையத்திறகு வர முயலுகிறது. மெய்ஞ்ஞானம் எல்லா திசைகளையும் தன்னுட்கொண்டு மையத்தின் மையமாக விளங்கும் இறைவனை எல்லாவற்றுக்கும் மூல காரணம் என்றுரைத்து அந்த மையத்தின் நுட்பத்தை, எளிமையை, மேன்மையை உணர்ந்து கொள்ளுவதால் கிடைக்கும் அனுபவம் விஞ்ஞான அறிவிற்கும் மேலானது என்று விளக்குகின்றது. விஞ்ஞான அறிவே ஒருவித அறியாமை என்று மெய்ஞ்ஞானிகள் கூறுவர். அநத அறிவிற்கும் அறியாமைக்கும் அப்பாற்பட்ட அறிவு ஒன்று உள்ளது. அந்த அறிவே நாம் அடைய வேண்டிய அறிவு என்பது அவர்களுடைய கோட்பாடு. இதனை ''அறிவு அறியாமை அழகியவாறு'' என்பார் திருமூலர்.

படைபபுக்கும் ஆதாரம் இறைவனுடைய பேரறிவும் பேராற்றலும் ஆகும் என்று மெய்ஞ்ஞானம் தெளிவாக்குகின்றது. இன்று விஞ்ஞான உலகில் பல சாதனைகள் புரிநதுள்ள பண்பட்ட விஞ்ஞானிகள் பலர் படைப்பின் நுட்பத்தை ஆராயும்பொழுது அது சுட்டிக்காட்டும் சொல்லொணா ஆற்றலைக்கண்டு ஆழ்ந்த வியப்படைகின்றார்கள். அணுவிலும் சிறிய பகுதிகள் பௌதிக, இராசாயன அடிப்படையில் இயங்குவதைக் காணும் இந்த விஞ்ஞானிகள், அவையெல்லாம் ஓர் அறிவின் தூண்டும் சக்தியால் தாங்களே அறிவு பெற்று இயங்குவது போலுள்ள நிலையைப் பார்க்கினறார்கள். அடுத்த கட்டமாக அவர்களும், நாம் எல்லோரும் உணர வேண்டியது இவற்றுக்கெல்லாம் மூலகாரணம் அந்தப் பேரறிவு என்பதுதான். அதுவே மெய்ஞ்ஞானம். மெய்ஞ்ஞானமே நம்முடைய குறிக்கோளாக அமையவேண்டும்.

# கலைமகள் அலைமகள் மலைமகள் துதி

சேக்கிழார்தாசன்



முத்தே வியர் துதியை மூவாத் தமிழ்ப்பாவில்
நத்துவார் ஓத நயந்தவித்தி நீடியனவே
நாதமுனி வேண்ட நலமாரும் பாமாலை
ஈதளித்தேன் அன்பர்க் கினிது.

### கலைமகள்

படிகநிற மாய்த்திகழும் பாமகளே! உன்றன்
கடிகமழும் பூந்தாள் கருத்தில்-நடிக்கத்
திடமுடைய எண்ணெண் கலையுடனே ஞான
வடிவமாய் வந்தருள்வாய் வாழ்த்து

(வேறு)

கமலா லயன்மா மயிலே கலையால்
சமலோர் சயமே பெறநீ அருள்வாய்
அமலாவுயிர்கள் அறிவால் மனமும்
தமலா லொளியில் தொழவைத் தவளே 1

மாதே உனதாள் மலரிட்டடியேன்
வேதா விமலை விதிதன் துணையே
ஏதா கிலுமோர் வழிதந் தெனைஉன்
போதாக் கியருள் புகழ்மோ கினியே. 2

சகலா கமவித் தையுருக் கொடுநீ
இகலா மலெனக் கருள்தந் தனையே
பகலாய் ஒவியாய் மணியாய் முதலாய்ப்
புகலாய் அகலாய் புவிகாத தவளே 3

அருவாய் அறிவாய் ஒவியாய் மறையாய்
உருவாய் வெண்டா மரையில் உறைவாய்
குருவாய் வருவோர் புகழ் தாவிணையால்
வருவாய் தருவாய் வளர்ஞா னமதே. 4

ஞான கரியந் தரிகா யத்ரி
மோனா கமவித் தகிமோ கனையே
மானார் மயில்நீ அறுவித் துனதாள்
வானாய்த் தொழநற் கதியே அருளே. 5

கவியாம் ஒட்டக் கூத்தன் கம்பன்
நவமாய் உனதாள் கவியால் தொழவும்
புவிமேல் அரிமேல் உனதின் அருளே
கவிதான் பொழியக் கனிவித் தவளே. 6

உனதாள் பணியின் ஊமைக் கவியாம்
கனமார் குழலாய்! கரை ஏற்றிடுவாய்;
புனமார் இருளை அகற்றும் ஒவியாய்
மனமே உறைவாய் மதியா னவளே!

சுருதிப் பொருளே: துதியின் சுவையே!
கருதிப் பணிவோர் கவலை அகலும்
உறுதிப் பொருளாய் உயிரின் ஒவியாய்க்
கருதா மனமும் இருளாக் கினையே. 8

வேடம் அகல்வித் துனதாள் பணியின்
சேடன் புவியில் ·நிலையுற் றிடலாம;
நாடும் வினையை நலிவா.க்கி உனைப்
பாடும் பண்யே பணியாக் குவையே

அறிவுப் புனலே! அருணோதயமே!
அறிவுக் கறிவே! அகனார் ஒளியே!
அறிவுக் குயிரே! அனமே! தனமே!
அறிவுப் பயிரே! தழைவித் தருளே. 10

### அலைமகள்

தண்துளவன் மார்பில் தழைத்தோங்குப் நீர்மாதே
மண்திகழ வாயார வாழ்த்தினேன் வண்மையினை
நன்குதவும் எண்திருவாய் எங்கும் நிறைந்தருளிப்
பங்கயமார் நின்தாள் பண்.

(வேறு)

தன்னே ரில்லாத் தனிப்பூ மருவும்
பொன்னே! திருவே! புகழ்மால் துணையே!
மின்னே! உலகின் முதலா னவளே!
இன்னே வருவாய் எமைக்காப் பவளே!. 1

காயோன் துலணயே! கமலா கரியே!
விரிநீர்ப் புவனம் விளைவித் தவளே!
தரியேன் மிடியால் தமியேன் உயர
விரைவாய் வருவாய் வினைதீர்ப் பவளே! 2

வாழும் உலகின் மழையாய் நதியாய்
ஏழும் புவனம் எழிலாக் கிடுவாய்
சூழும் உலகத் தொலையா வையுமே
வீழும் படிநீ விதிவைத் தருளே. 3

அன்றோர் முனிவன் உனைப்போற் றிடவும்
நன்றே கனகம் பொழிவித் தனையே!
இன்றோ புவியில் இல்லார் பலரும்
பொன்றா தருளாய் புகழ்பூப் பவளே; 4

பொன்மா மகளாய்ப் பூவின் மகளாய்
நன்மா கடலீத் திடவந் தவளே!
பன்மா மணிசேர் பவளத் திரளாய்!
என்பா லுறவந் தினிதாண் டருளே. 5

பூவா மலரே! புனையா வடிவே!
நாவால் தொழவும் நவிலா தவளே!
மூவா அமுதே! முதலே! முடிவே!
பாவாய்! அருளே பதுமத் துணையே! 6

கலையாம் உயிரின் உடலானவளே!
நிலையாம் உலகை நனிகாப் பவளே!
வலையாம் வினையின் சுழல்நீக்கி எமைத்
தொலையா நலமே தொடுத்தாண் டருளே. 7

'இல்லார் உலகில் இல்லார்; அவர்தாம்
நில்லார்' எனும் சொல் இனிநீ களைவாய்;
வில்லார் விமலன் துணைவ அமலன்
பல்லார் தொழமார் புவதிந் தவளே! 8

கல்லா தவனும் உனதாள் அருளால்
வல்லான் எனவாழ்ந் திடவைத் தவளே
சொல்லால் அறியா திடராம் எமைசேர்
ஒல்லா வினையை ஒழித் தாண் டருளே. 9

தனமே! வெயிலே! மழையே! பயிரே!
கனமே! அதியே! நிதியே! விழியே!
அனமே! அடியேன் அகமே இடமாய்
மனமே உருவாய் மகிழ்நதாண் டருளே. 10

**மலைமகள்**

நதிமிகாள் கறைகண்டன் நல்லுடலிற் பங்காள்
மதிகொண்ட மாதுன்னைப் போற்றத் துதிகொள்
கதிகாட்டி யுன்றன் அருள்காட்டி ஞானப்
பதிகாட்டி நின்றாள் பரை.

(வேறு)

எயிலார் புரமூன் றெரியச் செய்தான்
கயிலா யமலைத் தழுவும் விமலை
வெயிலாய் மழையாய் விளைமுத் தியதாய்
ஒயிலாய் அருளும் உமையே சிவையே. 1

மாதா எழுவர் நீதான் அறிவேன்
வேதா கமஞ்சொல் வானோன் நிதியே!
பாதாம் புயமே பணிவேன், அருளே!
போதாந் தமெனும் புவனேச் வரியே. 2

## திருக்குட நீராட்டு விழா



**வில்லிவாக்கம்**
**கீழ்மலையனூர் ஸ்ரீ அங்காள**
**பரமேஸ்வரி ஆலயத்**
**திருக்குட நீராட்டு விழா**
**3-9-1990 அன்று சிறப்புற**
**நடைபெற்றது.**
**பக்தர்கள்**
**திரளாக வந்திருந்து**
**அன்னையைத் தரிசித்து**
**அருள் பெற்றனர்.**

நவமாம் சிவசத் திஉருக் கொடுநீ
பவமாம் கடலைக் கடத்தற் கருள்வாய்
சிவமாம் உடலின் உயிரே! சுடரே!
அவமாம் வினையை அகல்வித் தருளே. 3

அறமே வடிவாய் அவுணர் அழிய
மறமே உருவாய் உயிர்காப பவளே!
உறவே! உலகின ஒலியே! சுவையே!
திறமே! கருணைச் சகன்மோ கினியே. 4

விழியால் பட்டர்க் கொளிகாட் டியருள்
மொழியால் கவிகா வியுனக் கடியான்
பழியா தொருமூங் கையுமின் கவியால்
விழிகண் டுளதால் புகழ்பா டினரே. 5

கண்ணின் மணியே! கமழ்பூந் திருவே!
பண்ணின் தமிழே! பழநற்சுவையே!
எண்ணில் சுடரே! இணையில் ஒலியே!
விண்ணின் கதியே! விமலன் துணையே! 6

மங்கைக் கரசீ பரமேச் வரியே!
செங்கை மலரும் கரும்பும் உடையாய்!
எங்கும் நிலவும் எழில்கன் னியுனைப
பொங்கும் அனபால் புகழ்போற் றுதுமே! 7

தையல் அனையே! மாலின் துணையுன்
மையல் பெறவே மையல் களைவாய்!
பையல் தொழப்பாற் கடலே அருளும்
சையம் உடையாய்! சைவப் பிடியே! 8

மாடன் மனையே காமாட் சியுமாய்
வேடன் மகிழும் மீனாட் சியுமாய்ச்
சேடன் பரவுந் தடங்கண் ணியுமாய்ப்
பாடும் அபிரா மியுமாய் அருளே. 9

போக பவானி புருடனில் மால்நீ
கோபக் காளி போரினில் கொற்றவை
மோகம் நீக்கி மோனம் அளிப்பாய்
சோகம பாவனை அருவாய் சுகமே. 10

நூற்பயன்

முத்தே வியர் துதியால் மூவாசை விட்டவர்
எத்தாலும் இன்புற்று வாழலாம்-சித்தியுடன்
மககள் பொருள் ஞானமுத்தியின்ப போதத்திற்
பக்குமாய் நிற்பர் பணிந்து.




**"திரிசிரபுரம் மகாவித்துவான்"**

## திரு மீனாட்சிசுந்தரம் பிள்ளை

**அருளியது**

**விளக்கம் :**

***சித்தாந்தவித்தகர் தி. சு. கோவிந்தசாமி***

கதிரவ னொடுங்குங் காலம்
இரண்டரைக் கடிகை யென்ன
அதிர்புன லமையுந் தானம்
அடைந்துமெய்ச் சுத்தி செய்தே
முதிரனுட் டானம் செய்து
மொய்த்தகண் மணியும் பூண்டு
பிதிர்தலில் அன்பு வாய்ந்து
பிறங்குவார் குழாத்தி னோடும்.
-மயிலாடுதுறைப்புராணம்.

விளக்கம்:

சூரியன் மறைவதற்கு இரண்டரை நாழிகைக்கு முன் (இரண்டரை நாழிகை 1 மணி) நீர்நிலையை அடைந்து உடம்பைத் தூய்மை செய்து விதிப்படி அனுட்டானம் செய்து, உருத்திராக்கம் தரித்துக் கொண்டு நீங்காத அன்புடைய சிவநேசச் செல்வர் களோடும் திருக்கோயிலுக்குப் போகவேண்டும்.

குறிப்பு:

சிவதரிசனம் அதிகாலையில் செய்தால் இரவிலே செய்த பாவம் போம். மதியம் செய்தால் பிறந்த நாள் தொடங்கிச் செய்த பாவம் போம். மாலைக் காலத்தில் செய்தால் ஏழு பிறவிகளிற் செய்த பாவம் போம். சோமவாரம், அட்டமி, பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, உத்தராயணம், சித்திரை விசு, ஐப்பசி விசு, மாதப் பிறப்பு, சூரியகிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி முதலிய புண்ணியகாலங்களில் சிவ தரிசனஞ் செய்தால் மிக மேலாகிய புண்ணியங்கள் உண்டாகும்.

பிரதோஷ காலத்திலே மெய்யன்போடு சிவ தரிசனஞ் செய்யின் கடன், வறுமை, நோய், பயம், துன்பம், மரணவேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும். முத்தி சித்திக்கும், சைவ சமயிகள் விபூதி உருத்திராக்கம் மட்டுமாவது தரித்துக் கொண்டால் போதுமானது. அவர்கள் சிவனடியார்களே எனச் சைவநூல் கூறும்.

''தெங்கங்காய் அரம்பை யீன்ற தீங்கனி
நறுங்கற்பூரம்
துங்கமாரடைகா யேனும் கிடைத்ததூக் கனிக
ளேனும்
பங்கஞ்சா ராது கொண்டு பரமனா லயத்திற்செல்க
அங்கவை அரிதேல் முற்றத்தமைதரு
துராலொழிக்க''

தேங்காய், இனிய வாழைப்பழம், கற்பூரம், பாக்கு, வெற்றிலை அல்லது கிடைத்த கனிகள் இவற்றை அரைக்குக் கீழ்படாது மேலே உயர்த்தப் பெற்ற கைகளால் ஏந்திக்கொண்டு போகக்கடவர்.

சிவபெருமானது திருக்கோயிலுக்கு வெறுங் கையோடு போகக்கூடாது. பொருளில்லாதவர் இலை, மலர் கொடுத்து வணங்க வேண்டும். அதுவுங் கூடாதவன் சந்நிதியில் உள்ள செத்தை முதலியவற்றை போக்கி வணங்க வேண்டும்.

''இனமறை புகழுந் தூல லிங்கமென்றுரைக்கப்
பட்ட
கனககோ புரமுன் தாழ்ந்து கனிந்தசிந் தையினுட்
புக்குப்
பனகபூ டணவே ரம்பப் பண்ணவன் பாதந்தாழ்ந்து
மனனமா நந்திப் புத்தேள் மருங்கடைந் திறைஞ்சல்
செய்து''

தூலலிங்கம் என சைவ நூல்களிற் கூறப் பட்ட திருக்கோபுரத்தைத் தாழ்ந்து வணங்கி, கனிந்த சிந்தையினுடன் உள்ளே புகுதல் வேண்டும். அங்கு முதலில் பாம்பை அணிந்துள்ள விநாயகப் பெருமானையும், இடப தேவரையும் வணங்கி அப்பால் கோபுர வாயிலில் எழுந்தருளியுள்ள அதிகார நந்தீசுவரையும் வணங்க வேண்டும்.

குறிப்பு: இடபத்தையும் நந்தி என்று கூறுவர்.

''அடியனேன் சிவ பிரானைச் சேவிப்பான்
அணைந்தேன் தீமை
கடிதரும் விடை கொடுத்துக் கடைக்கணித் தருளு''
கென்று
படியற இரந்து வேண்டிப் பயத்தோடு பத்தி மேவ
''முடிய நீ போய்வா'' என்று மொழிந்தருளிய தா
எண்ணி''

அடியேன் சிவபெருமானை வணங்கி வருவதற்கு அனுமதி செய்தருளும் எனப் பிரார்த்திக்க அவர் ''நீ போய் வா'' என்று உத்தரவு இட்டதாகப் பாவித்துக் கொண்டு பயபக்தியுடன் உள்ளே செல்லவேண்டும்.

''இருகரங் குவித்துட் புக்காங் கிலங்க
நின்றாடுமையர்
பொருவில் குஞ்சிதத்தாள் போற்றிப் புண்ணியச்
சிவபிரான் முன்
மருவியங் காதி சைவன் மலர்க்கையின்
அனைத்து நல்கி
யொருவற வனையான் செய்யும் உபசாரம்
அனைத்து நோக்கி''

(உள்ளே செல்லுங்கால்) இருகைகளையும் குவித்துக்கொண்டு சபாமண்டபத்திலே நடனஞ் செய்யும் ஆனந்த நடராசப் பெருமானது எடுத்த திருப்பாதத்தை வணங்கி கொண்டு சிவனது சந்நிதியடைக. அங்கு ஆதி சைவ சிவாச்சாரியாரிடம் தேங்காய், பழம் முதலியவற்றைக் கொடுத்து அவர்கள் செய்யும் உபசாரம் அனைத்தையும் ஒன்றிய உள்ளத்தோடு கண்டு தரிசித்திடுக.

''நிறையருட் பாடலாகி நிரம்புதே வாரம் யாரும்
அறைதிரு வாச கஞ்சீரமையிசைப் பாபல் லாண்டு
குறைதவிர் புராண மின்ன கொண்டுறத் துதித்தல்
செய்து
இறைபுகல் விபூதிமேனி வளைந்திரு கையால்
ஏற்று''



அருளாளர்களாகிய சைவ சமயாசாரியர்கள் அருளியதேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் ஆகிய தமிழ்ப்பாடல்கள் பாடித் துதித்திட வேண்டும். சிவாசாரியார் தரும் விபூதியைத் தாழ்ந்து இருகரம் நீட்டிவாங்கிக்கொள்ள வேண்டும்.

குறிப்பு:

திருக்கோயிலில் ஓதத்தக்க தோத்திரங்கள் தேவாரம், திருவாசகம், முதலிய திருமுறைகளேயாம். இதர பாடல்கள் ஓதத் தக்கன வல்ல. பூசகருக்கு இயன்ற தட்சிணை கொடுக்கக்கடவர்.

''விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இலையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமசிவாயவே''

சிறிதகன்றணுவு மண்ணிற் சிந்திடா வகை தரித்துக்
குறிதரு சோமாக் கந்தர் குரவனா யமரு மையர்
செறிபுகர் முகத்தே ரம்பர் சேவலங் கொடிப்பிரானார்
முறிவறு மிவரைப் போற்றி வலஞ்செயல் முறைமையாமால்''

பின்பு சிறிது அகன்று விபூதியை நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து ''சிவ சிவ'' என்று கூறி நெற்றி முதலிய இடங்களில் பூசிக்கொள்க. பின்பு சோமாஸ்கந்தர் (உற்சவமூர்த்தி) தட்சிணாமூர்த்தி விநாயகர், முருகன் முதலானோரை வணங்கி வலமாகச் செல்ல வேண்டும்.

இருகர சலன நீக்கி இயைதரக் குவித்துக்கொண்டு
பொருவரு பெருமான் பாத தாமரை யுளம் பொருந்தி
வெருவறச் சிந்தித் தேனும் அவன் துதி விரித்திட்டேனும்
ஒருவரு மிரண்டு நீங்கா தொண்மையி னியற்றியேனும்

(வலம் வரும் போது) இரண்டு கைகளையும் வீசிச் செல்லாது நெஞ்சுக்கு நேராகக் குவித்துக்கொண்டு சிவபெருமானது திருவடித்தாமரைகளைச் சிந்தித்துக் கொண்டோ, தோத்திரங்கள் சொல்லிக் கொண்டோ அல்லது இரண்டும் செய்துகொண்டோ வலம் வர வேண்டும்.

குறிப்பு: அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்தில் வலம் வருதல் வணங்குதல் கூடாது. (இது முதல் சுற்று)

''அறைபெரும் பக்தி வாய்ந்த அறுபத்து மூவராய
நிறையுடை யரைத்து திக்கி னிகழுந்தற் றுதியின் மேலும்
குறைவிலா மகிழ்ச்சி யம்மான் கூருமற் றதனால் அந்த
முறையுடை யரைச்சிந் தித்து முனிவறத் துதி செய்தேனும்''

உலகம் போற்றும் டக்தி வாய்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களைத் துதித்தால் அது சிவபெருமானுக்கு அவரைத் துதிப்பதை விடப் பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அத்தகைய சிவனடியாரகளைத் துதித்து (வலம் வருக)

குறிப்பு: (இது இரண்டாவது சுற்று)

'' இடைவெளி தோற்று றாமல் இனிதடி யெடுத்து வைத்தும்
இடைதர முக்காற் சூழல் விதிமேலுமியம்பா நிற்பர்
கடைபடு குணுங்கே யாவன் கைகளை வீசிச் செல்லின்
உடையிராக் கதனா மார்பின் உறப்பிணித் தடையின் மாதோ''

(வலம் வரும் போது) இடைவெளி விடாமல் அடிமேல் அடி எடுத்து வைத்து மூன்றுமுறை வலம் வருதல் உத்தமம். அதற்கு மேலும் (ஐந்து, ஏழு, ஒன்பது, பதினைந்து இருபத்தொன்பது தரமும) செய்தலும் உண்டு என்பர். கைகளை வீசிச் செல்வோன் பிசாசு எனப்படுவான். கைகளை மார்பில் கட்டிக் கொண்டு செல்வோன் இராக்கதன் எனப் படுவான்.

குறிப்பு: வலம் வரும் ஆவரணத்தில் உள்ள பலிபீடத்தையும இடபத்தையுப் சேர்த்து வலம் வர வேண்டும். அங்குப் பலிபீடமும் இடபமும் இல்லையாயின் அதற்கு வெளிப்பிரகாரத்தில் உள்ள பலிபீடத்தையும் இடபத்தையும் சேர்த்து வலம் வர வேண்டும். சிவலிங்கத்துக்கும் அந்தந்த ஆவரணத்திலுள்ள பலிபீட. இடங்களுக்கும் இடையே போகலாகாது. (ஆவரணம்- சுற்று)

அஞ்சலி செய்து சூழின் அமரனே யாவனாலென்
றெஞ்சலில் சிவாக மங்கள் இயம்பலின் இந்த வாறே
மஞ்சவிர் கோயில் சூழ்ந்து(ம்) ஆண்டசண்டீசர் பாற் போய்
தஞ்சமென்றிருகை தட்டித் தரிசன பலனையின்று

கைகளைக் கூப்பித் தொழுவோன் தேவன் எனப்படுவன் என சிவாக மங்களிற் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு (மூன்றாம் முறை வலம் வரும் போது சிவபெருமானால் சண்டேசப்பதம் அருளப் பெற்ற) சண்டேசுரநாயனார் திருச்சந்நிதியை அடைந்து (தாளாத்திரம் செய்து) அதாவது மூன்று முறை கைகொட்டி சிவபெருமான் தரிசன பலனை''

குறிப்பு: 'கை கால் கூப்பித் தொழீர்'' என்ற திருநாவுககரசர் தேவாரமுங் காண்க.

''பெற்றனன் அடியேன்'' என்று பேசி யஞ்சலித்த பின்னர்
அற்றமி லுமையாள் கோயில் அடைந்துப சாரமாய
முற்றவும் முன்போல் ஆற்றி முனிவற நோக்கிப் போற்றிக்
குற்றமில் விபூதியோடு குலவு செஞ்சாந்துமேற்றே''

''அடியேனேன் பெற்றனன்'' என்று கூறி வணங்கிக் கொண்டு அம்மையார் கோயிலுக்குச் செல்ல வேண்டும். அங்கு முன்போல உபசாரங்கள் செய்து வணங்கித் துதித்து விபூதியும், செஞ்சாந்தும், (குங்குமம்) பெறறுக் கொள்ளவேண்டும்,

குறிப்பு: அம்மையார் சந்நிதியிலும் விபூதி கொடுக்கப்பட்டது என்றும், கொடுக்கப்படவேண்டும் என்றும் இதனால் தெரிகிறது. செஞ்சாந்து என்பது தேவாரத்தில் 'குங்குமக் குழம்பு' என வருவதால் தூளாகக் கொடுக்காமல் சந்தனம் போல் கொடுக்கப்பட்டது என்றும் தெரிகிறது. தற்போதும் அவ்வாறு செய்யலாம்.

''உறுவல மாகச் சூழ்போந் துயர்கொடி மரப்பாற் போந்து
மறுவிலட் டாங்கமாக வணக்கமோ ரைங்காற் செய்து
பெறுமுறை யாங்க மர்ந்து பிறங்கிய மூலம் நூறு
உறுதிசெ யகோர நூறும் அடைவுறக் கணித்தல் வேண்டும்.

பின்பு வலமாக வந்து கொடிமரத்தின் (கீழ்புறம் வடக்கே தலைவைத்து) அட்டாங்க நமஸ்காரம் ஐந்துமுறை செய்தல் வேண்டும். (பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும்) பின்பு வடக்கே நோக்கியிருந்து (மூலம் என்பது சைவாசாரியார்பால் தீட்சை பெறும்போது உபதேசிக்கப்பட்ட சிவபெருமானது மூலமந்திரம். அகோரம்-அகோர மந்திரம். சைவ சமயிகள் சமய தீட்சை பெற்றுச் சைவ சமயத்தை வரம்போடு அறிந்து ஒழுகிப் பயன் அடைவார்களாக) மூல மந்திரத்தை நூறு தரமும், அகோர மந்திரத்தை நூறு தரமும் ஜெபித்துத் திரும்ப வேண்டும்.



ஓம் நமசிவாய!

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமசி வாயவே.

—திருநாவுக்கரசர்



# கம்பரின் இராமாவதாரம்



டாக்டர் த. அமிர்தலிங்கம் **[23]**

தன் அன்னை கைகேயியின் முகத்தைக் காணப் பிடிக்காமல் விருட்டெனப் புறப்பட்டுக் கோசலை யின் மாளிகைக்கு வந்து சேரும் பரதன் கோசலை யைக் கண்டதும் படாலெனத் தரையில் விழுந்து அவள் திருவடிகளை உறுதியாகப் பற்றிக் கொண்டு அழுகிறான். ''அன்னையே என் தந்தை எங்கே? இராமன் எங்கே? என் இராமன் காட்டிற்குச் சென் றதை நீங்களாவது தடுத்திருக்கக் கூடாதா? தடுத் திருந்தால் தந்தை வானகம் செல்ல நேர்ந்தி ருக்குமா? ஒரு கொடியவள் வயிற்றில் நான் பிறந்து தந்தை மடியவும், என் உயிரினும் மேலானஇராமன் காடேகவும் காரணமாகிவிட்டேனே! கோசலநாடு இக்கொடிய துன்பம் கொள்ளக் காரணமாகஇருந்த நான் அல்லவா மடிந்து பட்டிருக்க வேண்டும்! இராமரைக் காட்டிற்கு ஓட்டிய சதிகாரர்களின் குலம் அல்லவா நிர்மூலமாகி அழிய வேண்டும்' என்பதாகப் பலவும் கூறிப் பரதன் புலம்புகிறான்.

''கடியவள் வயிற்றினிற் பிறந்த கள்வனேன்'' என்று தன்னைநொந்துகொண்டுதுடிக்கும்பரதனை ''தருமமேயனான்'' என்று தருமத்தின் வடிவமாகப் போற்றிக் கூறுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். தருமத்தின் வடிவமான பரதன் மீதும் கோசலைக்கு ஒரு சந்தேகம் எழுகிறது. பரதனின் துடிப்பெல் லாம் வெறும் நடிப்பே என்றும் அவள் எண்ணு கிறாள். ''இராமனைக் காட்டிற்கு விரட்டும் கைகேயியின் வஞ்சகச் செயலை நீ முன்னமே அறிய மாட்டாயா?

''கைகயர் கோன்மகள் இழைத்த கைதவம்
ஐயநீ அறிந்திலை போலும்''

தான் கொண்டிருக்கும் ஐயத்தை பரதனிடமே கேட்டு விடுகிறாள். கோசலையின் ஐயத்தை பரதனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. பொறியில் அகப்பட்ட சிங்கம் போல் அதைக் கேட்டதும் துடிதுடித்துப் போகிறான் பரதன்.

''தாயே! எனை ஈன்ற தாயின் வஞ்சமனம் நான் சத்தியமாக அறிய மாட்டேன். இராமரைக் காட்டிற்கு விரட்டும் சூழ்ச்சியில் எனக்குப் பங்கி ருக்குமானால் அறம் பிழைத்தோர்களும், அருளிலா நெஞ்சினோரும், பிறர்மனை சென்று இறந்தவர் களும், சினத்தால் பிறரை நோகச் செய்தவர்களும் பிற உயிர்களைக் கொன்று உண்டு வாழ்பவர்களும், தவசியர்க்குத் துன்பம் செய்வோரும் சென்று சேரக் கூடிய நரகத்தை நானும் போய் சேர்வேனாக. பெண் கொலையாளர்கள், போரில் புறமுதுகிட் டோர் சென்று சேரக்கூடிய நரகத்தை நானும் போய் சேர்வேனாக. ஈன்ற அன்னை பசியால் துடிக்கத் தனித்துண்ணும் சண்டாளர்கள், நம் பிக்கைத் துரோகிகள், தஞ்சமடைந்தோர்க்கும் வஞ்சமெண்ணும் பாவிகள் சென்று வாடக்கூடிய நரகில் நானும் துயருறுவேனாக. செய்ந்நன்றி மறந்த பாவிகள், பொய்சாட்சி கூறும் பாவிகள், தெய்வநிந்தை கூறும் பாவிகள், அருகிலுள்ளோர் பசியால் துடிக்கக் கண்டும் அவருடன் பகிர்ந்துண் ணாமல் தனித்துண்ணும் கருணை மறந்த பாவிகள் முதலானோர் சென்று துடிக்கக் கூடிய நரகினில் நானும் துடித்துத் துயருறுவேனாக. கன்னியரைக் கற்பழிக்கும் பாவிகள், பிறர்மனை நயக்கும் மாபாவிகள், கள்குடியர்கள், களவாடிகள் சென்று சேரக்கூடிய தீக்கதியினை நானும் சென்று சேர் வேனாக''

பரதன் கோசலையிடம் இவ்வாறு சபதம் செய்து கூறுவதை இருபது பாடல்களில் வர்ணித் திருக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். அவற்றில் முக்கியமான ஒரு சில பாடல்களை மட்டும் இங்கே நாம் படித்துணரலாம்.

''தாய்பசி உழந்துயிர் தளரத் தான்தனி
பாய்பெரும் பாழ்வயி றளிக்கும் பாவியும்
நாயகன் பட நடந்தவனு நண்ணுமத்
தீயெரி நரகத்துக் கடிது செல்கயான்''

''கன்னியை அழிசெயக் கருதினோன் குரு
பன்னியை நோக்கினோன், பருகினோன் நறை
பொன்னிகழ் களவினிற் பொருந்தி னோன்எனும்
இன்னவர் உறுகதி என்ன தாகவே.''

''தீயன கொடியவள் செய்த செய்கையை
நாயினேன் உணரின் நன்னெறியின் நீங்கலாத்
தூயவர்க் கிடரிழைத் துழலுந் தோமுடை
ஆயவர் வீழ்கதி அதனின் வீழ்கயான்''

பரதன் கூறிடும் இச்சத்திய வார்த்தைகளைக் கேட்ட பிறகுதான் பங்கமில் குணத்துப் பரதனைப் பரிபூரணமாகத் தெளிந்து கொள்கிறாள் கோசலை. கானகம் சென்ற இராமன் மீள வரக் கண்டவளைப் போல் பேருவகை கொண்டு பாசத்தால் தனங்களில் பால் சோர, கண்களில் கண்ணீர் வார, பரதனை அணைத்துக் கொள்கிறாள். ''மன்னர் மன்னவா! மனுமுதலாக சிறந்து விளங்கிடும் சூரிய குல மன்னர்களில் உன்னை ஒப்பவர் யாருமே இல்லை'' என்றும் பரதனுக்கு வாழ்த்து கூறுகிறாள் கோசலை.

''முன்னை நுங்குல முதலுளோர் கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையர்
மன்னர் மன்னவா என்று வாழ்த்தினாள்''

பரதசத்ருக்கனர்கள் கேகய நாட்டிலிருந்து வந்து கோசலையின் மாளிகையில் இருக்கிறார்கள் என்ற தகவல் அறிந்து வசிட்ட முனிவரும் அங்கு விரைந்து வந்து சேருகிறார். வசிட்டரின் பாதங்களையும் வணங்கும் பரதன் ''என் தந்தை........ தந்தை எங்கே'' என்று துடிக்கிறான். தசரதரின் உடலைத் தைலக் காப்பு செய்து வைத்திருக்கும் இடத்திற்குப் பரதசத்ருக்கனர்களை அழைத்துக் கொண்டு போகிறார் வசிட்டர். எண்ணெய் ஆட்டப்பட்டதசரதரின் பொன்னுடலை வெளியே எடுக்க, ''ஆ! ஐயோ!'' என்றலறித் தத்தம் கண்களின் நீராலும் தந்தையைக் குளிப்பாட்டுகிறார்கள் பரத சத்ருக்கனர்கள்.


''மண்ணின் மேல்விழுந் தலறி மாழ்குவான்
அண்ணல் ஆழியான் அவனி காவலான்
எண்ணெய் உண்டபொன் எழில்கொள் மேனியைக்
கண்ண நீரினாற் கழுவ ஆட்டினான்''

மறையவர்கள் மன்னர் மன்னவனான தசரதரின் பூதவுடலைப் பூமாலை போலத் தம் கரங்களில் தாங்கி பொன்விமானத்தில் எல்லோரும் நன்கு காணுமாறு வைத்து அலங்காரம் செய்கிறார்கள். பிறகு யானைமேல் அப்பொன் விமானத்தை அவர்கள் ஏற்ற பூவுலகு முழுதாண்ட தசரதரின் அந்திம யாத்திரை தொடங்குகிறது. வசிட்டரும், தசரதரின் தலைமையமைச்சருமான சுமந்திரரும், பிற அமைச்சர்களும், பரத சத்ருக்கனர்களும், சேனாபதிகள், நண்பர்கள், சிற்றரசர்கள், அயோத்தி மக்கள் எல்லோரும் கண்ணீரைப் பெருக்கியவண்ணம் அந்த இறுதி யாத்திரையில் கலந்து கொள்கிறார்கள். சாப்பறைகளும், சங்குகளும் ஒலிக்கும் சோக இசை யாவரையும் நெக்குருகச் செய்கிறது. சரயு நதிக்கரையில் முறைப்படியான அந்திமக் கிரியைகள் நடைபெறுகின்றன. சிறப்புற அமைக்கப்பட்டிருக்கும் ஈமப் பள்ளியில் தசரதரின் புண்ணியவுடலை எடுத்து வைத்து மறையவர்கள், பரதரிடம் வருகிறார்கள். 'வீரனே! சாத்திர முறைப்படியான ஈமக் கடனை வந்து செய்க'' என்று அழைக்க, தந்தைக்கு ஈமக்கடன் புரிய பரதனும் புறப்பட, வசிட்டர் வந்து தடுக்கிறார். ''பரதா நில்! உன் தாயின் மீதேற்பட்ட மனவருத்தத்தில் உன்னை மகனில்லை என மறுத்து விட்டார் தசரதர். நீ அவருக்கு ஈமக்கடன் ஆற்றக் கூடாதென்பதும் அவர்தம் ஆணை''

''என்னும் வேலையில் எழுந்த வீரனை
அன்னை தீமையால் அரசன் நின்னையும்
துன்று துன்பத்தால் துறந்து போயினான்
முன்னரே எனா முனிவன் கூறினான்''

வசிட்டரின் இவ்வுரை பரதனை மேலும் நிலைகுலைந்து போகச் செய்துவிடுகிறது. மனம் ஒடிந்து போகும் பரதனின் முகத்தில் உயிர்க்களை அறவே நீங்கிப் போக ''இனி நான் இருந்தென்ன? இறந்தென்ன? எல்லாம் என்தாய் எனக்கு வாங்கித் தந்த வரம்'' என்றும் புலம்புகிறான் பரதன்.

சத்ருக்கனனைக் கொண்டு தசரதனின் ஈமக் கடன்களைச் செய்து முடிக்கிறார் வசிட்டர். தசரதரின் பொன்னுடலை எரியூட்டுகிறான் சத்ருக்கனன். தசரதரின் உடலை உண்ணும் அவ்வெரியிலேயே தசரதரின் அறுபதினாயிரம் தேவிமார்



களும் உடன்கட்டை ஏறி கற்புடை மகளிர்சேரும் நற்கதியை அடைகிறார்கள். தந்தைக்குச் செய்து முடிக்க வேண்டிய பத்துநாள் காரியங்களையும் பழைமையான தரும சாத்திர முறைப்படியே சத்ருக்கனன் செய்து முடிக்கிறான். எல்லாம் ஆன பிறகு பரதனுக்குப் பட்டாபிசேகம் செய்வதுபற்றி அமைச்சர்களுடன் ஆலோசித்து முடிவுக்கு வரும் வசிட்டர் அனைவரையும் அழைத்துக் கொண்டு பரதனின் மாளிகைக்கு வருகிறார். ''மைந்தா பரதா! இராச்சிய பாரத்தை நீ ஏற்றுத் தரும நெறிதழைத்தோங்க அரசாள வேண்டும் என்பதை எடுத்துக் கூறவே இங்கே எல்லோருமாக சேர்ந்து வந்திருக்கிறோம். மன்னர் இல்லாத மாநிலம், சூரியனும் சந்திரனும் இல்லாத பூமி போன்றது; அது உயிர் இல்லாத உடலும் ஆகும். தேவர்கள் உலகிலும் தேவேந்திரன் உண்டு, அசுரர்களுக்கும் அவ்வாறே அசுரேந்திரன் உண்டு. நிற்பனவும் செல்வனவுமான அஃறிணை விலங்குகளும் பறவைகளும்கூட தங்களுக்கென்று அரசரைப் பெற்றிருக்கின்றன. உன் தந்தை தசரதர் இறந்துபட்டார். உன் தமையன் இராமனும் காட்டிற்குச் சென்று விட்டான். அரசர் இல்லாமல் அயோத்தி மாநகரமே கடல் நடுவே உடைபட்டுப் போன கலம் போலத் தத்தளித்துக் கொண்டுள்ளது. அவர்கள் துன்பத்தைத் துடைக்க உடனே நீ இராச்சிய பாரத்தை ஏற்றுக் கொள்.''

''உந்தையோ இறந்தனன் நும்முன் நீத்தனன்
வந்தநும் அன்னைதன் வரத்தின் மைந்தநீ
அந்தமில் பேரரசு அளித்தி அன்னது
சிந்தனை எமக்கெனத் தெரிந்து கூறினான்.''

இராச்சிய பாரத்தை ஏற்குமாறு வசிட்டர் வற்புறுத்த அதை அமைச்சர் பெருமக்களும் ஆமோதிக்கக் காணும் பரதன் தான் உண்ண மறுக்கும் விடத்தை உண்ணக் கூறி அனைவரும் கட்டாயப்படுத்துவதாகவே உணர்ந்து 'கண்ணீரை பெருக்குகிறான். ''மூவுலகும் ஆள உரிமை படைத்தவனாய் எனக்கு முன் பிறந்த ஸ்ரீராமன் இருக்க, எனை அரசேற்குமாறு வற்புறுத்துகிறீர்களே! இது என்ன தருமமா? மூத்தவன் இருக்க தம்பி அரசாள்வது உலகில் எங்கு உள்ள நீதிமுறை? என் தாய் அவ்வாறு வரம் கேட்டுப் பெற்றது கொடுமை, அக்கொடுமையை அங்கீகரித்துஎன்னை நீங்கள் அரசேற்கக் கூறுவது கொடுமையிலும் பெரிய கொடுமை. கலியுகத்தில்தான் இத்தகைய கொடுமைகள் நடைபெறும் என்பதாகப் பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். இத்திரேதா யுகத்திலும் இதைநீதி என்று நீங்கள் நியாயம் கற்பித்துக் கூறினாலும் நான் ஒரு போதும் அயோத்திக்கு அரசன் ஆகமாட்டேன். நானே காட்டிற்குப் போய் இராமனை அழைத்து வந்து அவருக்கே நியாயப்படி மகுடம் சூட்டப் போகிறேன். இராமருக்கு மகுடம் சூட்டும் என் விருப்பம் கைகூடாமல் போனால் நானும் காட்டில் இருந்து தவம் புரிவேன். இந்த என் முடிவை யாரேனும் மாற்றமுயன்றால் அப்போதே நான் என் உயிரை மாய்த்துக் கொண்டு விடுவேன். இது உறுதி'' என்று பரதன் தன் மனக்கருத்தை அனைவருக்கும் தெளிவுபடுத்துகிறான்.

''நன்னெறி என்னினும் நானிந் நானிலம்
மன்னுயிர்ப் பொறைசுமந் திருந்து வாழ்கிலேன்
அன்னவன் தனைக்கொணர்ந்து அலங்கல் மாமுடி
தொன்னெறி முறைமையில் சூட்டல் காண்டிரால்''

''அன்றெனில் அவனொடு அரிய கானிடை
நின்றினி தருந்தவம் நெறியில் ஆற்றுவன்
ஒன்றினி உரைப்பின் என்னுயிர் நீக்குவேன்
என்றனன்'.'

## வாசகர் எண்ணங்கள்

இறைவன் புகழ்பரப்பும் திருக்கோயில் இதழ் மிகச் சிறந்த கருத்தோவியங்களைத் தாங்கி வருகின்றது. மாண்புமிகு அமைச்சர்களும ஆன்மீகப் பெரியோர்களும் ஒரு சேர எழுதிவருவது சிறப்பிற்குரியது, பெருமைக்குரியது.

—சிதம்பர சூரியநாராயணன
பெரியகுளம்626501

ஆணையர் திருமிகு வ.இராமதாஸ் அவர்களின் சிவஞான போதம், பேதமில்லா தங்கமான போதனையே

—திருமதி உமாதேவ் ஐயப்பன்
பெண்ணாடம்
திட்டக்குடி

திருக்கோயில் ஆசிரியர் கவிஞரும் டாக்டருமான அமிர்தலிங்கம் அவர்கள் கலைமகளாம் சரஸ்வதிக்குப் படைத்திட்ட கற்கண்டமுதே இறையருள் இன்னிலக்கியமே கம்பரின் இராமாவதாரம் ஆகும்.

—செல்வி ஈ.அமுதா,
நன்னிலம்

பரதன் அறிவிக்கும் இம்முடிவு அங்கிருக்கும் அனைவரையும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தி விடுகிறது. ''அற்புதம்!. பரதனின் நேர்மையே நேர்மை'' என்பதாக, எல்லோரும் பரதனின் பெருங்குணத்தைப் போற்றிப் பரவசப்படுகிறார்கள் ''தாய் தன் வரத்தால் வலிய வாங்கிக் கொடுத்த இராச்சியத்தை வேண்டாமென்று எட்டி உதைக்கும் பரதா! நீ இராமரை விடவும் மேம்பட்டவன்! பதினான்கு உலகிலும் உன்புகழ் வாழ்க! வாழ்க!'' என்று பரதனைப் போற்றி கொண்டாடுகிறார்கள்.

''இராமரை மீள அழைத்து வந்து அரசனாக்குவோம் அனைவரும் புறப்படுங்கள்'' என பரதன் முரசறைவிக்கச் செய்கிறான். அத்தெய்வத் தேன்சொற்களைக் கேட்கும் மக்கள் அமிழ்தம் தெளிக்க, உயிரற்ற பிணம் உயிர்த்தெழுவதைப் போலவே தாமும் உயிரும் உணர்வும் பெறுகிறார்கள். பரதசத்ருக்கனர்களுடன், வசிட்டர் நால்வகைப் படைகள், படைத் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், அறவோர்கள், கோசலை சுமத்திரை, கைகேயி உள்ளிட்ட அரண்மனைப் பெண்டிர், அயோத்தி மக்கள் ஆகிய அனைவருமே இராமரை அழைத்து வரும் ஆர்வத்துடன் வனத்திற்குப் புறப்படுகிறார்கள் பரதனை அரசனாக்கிப் பார்க்கும் ஆசை அறவே அழிந்து போனதால் கைகேயியும் வேறு வழியின்றி இராமனை அழைக்கப் புறப்பட்ட மக்கள் கூட்டத்துடன் தானும் சேர்ந்து கொண்டு விடுகிறாள்.

அகத்திய முனிவர் கடல்நீரையெல்லாம் குடித்த காலத்தில் எப்படி பரந்த கடல்வெறுமையுற்றதோ அவ்வாறே இப்போது அயோத்தியும் வெறிச்சென்றாயிற்று என்று வர்ணிக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

''அறிஞரும் சிறிஞரும் ஆதி அந்தமாச்
செறிபெருதானையும் திருவும் நீங்கலால்
குறியவன் புனலெலாம் வயிற்றில் கொண்டநாள்
மறிகடல் ஒத்ததவ் வயோத்தி மாநகர் ''

''படைபெருத்தலின் பார் சிறுத்ததோ, பார் சிறுத்தலின் படை பெருத்ததோ'' என்று கூறுவதற்கொப்ப இராமரை அழைக்கச் சென்ற மக்களின் மிகுதியால் திக்குகள் போதிய விசாலம் உள்ளன அல்லவென்று குறைபட்டுக் கொள்ளும் வண்ணம் மிகச் சிறியதாகிவிட்டன என்றும் வருணிக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

தேர்களும், குதிரைகளும், யானைகளும் தத்தம் எண்ணிக்கை மிகுதியால் பூவுலகை மறைத்துவிட, கொடிகளின் கூட்டம் வானை மறைத்துவிட, சேனைகள் புறப்பட்டபோது எழும் பெருந்தூளி பிரமதேவர் கண்ணையும் மறைத்ததென மிக அற்புதமாக வர்ணிக்கிறார் கம்பர்.

''பண்ணின் புரவிதேர் பகடும் பண்டியும்
மண்ணினை மறைத்தன மலிந்த மாக்கொடி
விண்ணினை மறைத்தன விரிந்த மாத்துகள்
கண்ணினை மறைத்தது கமலத் தோனையே ''

தசரதர் மறைந்த துயரமும், இராமரைப் பிரிய நேர்ந்த துயரமும் தோன்ற வாத்தியங்கள் ஒன்றும்முழக்கப்படாத காரணத்தால் சித்திரத்தில் தீட்டிய சேனையைப் போன்றே அமைதி அங்கு நிலவியது என்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். அஞ்சனம் தீட்டுதல், ஆபரணங்கள் புனைதல் போன்ற ஒன்றும் இன்றி இராமரை மீளஅயோத்திக்கு அழைத்து வருவது ஒன்றே எண்ணமாக கடலென மக்கள் திரண்டு செல்கிறார்கள்.

கடலெனத் திரண்டு செல்லும் மக்கள் கூட்டத்தில், இராமர் வனம் ஏகக் காரணமும், தசரதர் வான் ஏகக் கூற்றமும் ஆனவளான மந்தரையும் உடன் சேர்ந்து வருவதைக் கண்டுவிடுகிறான் சத்ருக்கனன். மந்தரையைக் கண்டதும் சத்ருக்கனன் எல்லையற்ற கோபம் கொண்டு அவளிருக்கும் இடத்திற்கு ஓடி அவளைத் தன்னிரு கைகளால் தூக்குகிறான். பரபரவெனச் சுழற்றி அப்படியே ஆகாயத்தில் அவளை வீசி எறிய முற்படும் சத்ருக்கனனை ஓடிவந்து தடுத்து நிறுத்துகிறான் பரதன். 'தம்பி! நானும் அன்னை எனப் பாராமல் கைகேயியைக் கொன்று விடும் அளவிற்குக் கோபம் கொண்டேன். ஆனால் என் செயலை இராமன் ஏற்க மாட்டான் என்பதாலேயே நான் கைகேயியைக் கொல்லாமல் விட்டேன். அதேபோல் நீ மந்தரைக்கு ஒரு சிறு ஊறு செய்தாலும் அதை இராமன் அறிந்தால் நம்மைத் ''தம்பியல்லீர்!'' எனத் துறந்து விடுவான். ஆகவேசினத்தைத் தவிர். மந்தரையை விடு'' என்று கூறி மிகவும் சிரமப்பட்டு சத்ருக்கனனின் பிடியிலிருந்து விடுவிக்கிறான் பரதன்.

மந்தரைக் கூற்றமும் வழிச்செல் வாரொடும்
ந்தியே போதல் கண்டு இளவல் ஓடியார்த்து
ந்தரத் தேற்றுவான் உழன்று பற்றலும்
ந்தரத் தோளவன் விலக்கிச் சொல்லுவான்''

முன்னையர் முறைகெட முடித்த பாவியைச்
ன்னபின்னஞ் செய்தென் சினத்தைத் தீர்வன்நான்
ன்னையின்று என்ஐயன் துறக்கும் என்நலால்
ன்னையென் றுணர்ந்திலேன் ஐயனே என்றான்''

,'ஆதலான் முனியும் என்றையன் அந்தமில்
வேதனைக் கூனியை வெகுண்டு மென்னினும்
கோதிலா வருமறைக் குலவுநூல் வலாய்
போதும் நாமென்று கொண்டரிதிற்.போயினான்.''

(தொடரும்)

# தீபாவளி




— நிறைமதி —

பட்டாசு பண்டிகை வந்தாச்சு
பட்டாடை கூடத் தைச்சாச்சு
துப்பாக்கியாலே சுட்டிடுவேன்
டுப் டுப் டுப் டுப் டுப் (பட்டாசு)

ஊரிலே இருந்து தாத்தா பாட்டி
நேத்தே வீட்டுக்கு வந்தாங்க
ஊசிப் பட்டாசு கம்பி மத்தாப்பு
எல்லாம் வாங்கித் தந்தாங்க் (பட்டாசு)

அணுகுண்டு வெடியா வேணாங்க
அம்மாவுக்குப் பயம் பயம்
தொட்டிலில் தூங்கும் தங்கச்சிபாப்பா
வீர்வீர் எனவே அழும் அழும் (பட்டாசு)

நரகாசூரன் இறந்ததனாலே
நாம் கொண்டாடும் பண்டிகை
விடுமுறையோடு இனிப்பும் கிடைக்கும்
தினமும் வந்தா தேவலை (பட்டாசு)



திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் இசை விழாவில் கலைமாமணி தருமபுரம் சுவாமிநாதன் அவர்களுக்கு தேவாரத் தமிழ் இசைத் தென்றல் பட்டம் வழங்கப்பட்டது. திருத்தணி சுவாமிநாத னுக்குச் சிறப்பு தம்பூரா பரிசளிக்கப்பட்டது. அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராம தாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் ஓதுவார் சிறப்புப் பயிற்சி சான்றிதழ்களை வழங்கினார். டாக்டர் சேலம் ஜெயலட்சுமி, மு.கிருட்டிணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) உடன் உள்ளனர்.








விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில் கண்டராதித்தன் கோபுரம் எனும் நடு இராஜ கோபுரத் திருப்பணியை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் ஆரம்பித்து வைக்கிறார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையேற்ற இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ப.வள்ளல் பெருமான் எம்.பி.பி.எஸ், சட்டமன்ற உறுப்பினர் திருமிகு கோ. பூவராகவன் பி.எஸ்.ஸி(ஹானர்ஸ்), திருப்பணிக் குழுத்தலைவர் டாக்டர் பி. மருதைப்பிள்ளை, துணை ஆணையாளர் திரு சி.வி. இராஜாராம், உதவி ஆணையாளர் சி.இளங்கோ, நிர்வாக அதிகாரி இரா.பத்மநாபன் பி.எஸ்.ஸி., பி.எல். ஆகியோர் கலந்து கொண்டனர்.

